# செந்தமிழ்

தொகுதி 77 மார்ச்சு '83 பகுதி

## திரு. வி. க. நூற்றாண்டு விழ

## மலர்

4489

மதுரைத்தமிழ்ச்சங்கம்
THE MADURA TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்து

**தமிழ் இலக்கிய இத**

ஆசிரியர்: டி.பி.எம். பெரியசுவா

## ஆசிரியர் பக்கம்

அன்புடையீர்! வணக்கம்,

தமிழ்த் தென்றல் திரு. வி. க வின் நூற்றாண்டு விழா மலராக இவ்விதழ் வெளியிடப்படுகிறது. மதக்காழ்ப்பும், தனிப்பட்ட விரோத உணர்வும் இன்றி இலக்கிய வளர்ச்சி, அப்பழுக்கற்ற அரசியல், தொழிலாளர் நலன், பத்திரிகைத் தொண்டு, ஆசிரியர் பணி ஆகியவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தமிழக வரலாற்றில் அழியாத இடம் பெறுகின்ற திரு வி. க. வின் வாழ்வும் வாக்கும் நம் சிந்தனையைச் சிறப்பிக்கும் என்பது உறுதி.

சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் இரண்டும், பயணக் கட்டுரையின் இறுதிப்பகுதியும் இவ்விதழில் இடம் பெறு-கின்றன. தாமே பயின்று தமிழ்ப் பேராசிரியர் நாவலர். ந. மு. வேங்கடசாமி நாட்டாரின் நூற்றாண்டு விழா பற்றிய அறிவிப்பும் வெளியாகிறது. தமிழகத்தின் மூதறிஞர்களும், பழம் புலவர்களும் நாட்டாரைப் பற்றிய செய்திகளைத் தக்காங்கு அறிவிப்பின், வரலாற்றைப் பெருமைப்படுத்தும் புகழ் அவர்களைச் சாரும்.

கொள்கைப்பிடிப்பினைத் தளரவிடாமல், மொழி இலக்கிய வளர்ச்சியினைக் குன்றாது காக்கும் பெரும்பணியினைத் தொடர்ந்து நடத்திவரும் இலக்கிய இதழ்களை ஊக்கு-விக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தினருக்கு செந்தமிழின் பாராட்டுகள்.

—ஆசிரியர்

# செந்தமிழ்

தொகுதி-77 மார்ச்சு 83 பகுதி-


உள்ளுரை


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | குறள் நெறியில் திரு. வி. க. புலவர் - பால - எல்லப்பிள்ளை | ... 1 |
| 2. | தம்பிரான்படி உரைத்திறன் டாக்டர் சு. வேங்கடராமன் | ... 2 |
| 3. | ஆண்மக்கட் பெயர்கள் — ஓர் ஆய்வு அ. நடராஜன் | ... 12 |
| 4. | கைதை — ஓர் ஆய்வு பா. மல்லிகா | ... 19 |
| 5. | திரு. வி.க வும் அரசியல் தலைவர்களும் ஆ. நாகலிங்கம் எம்.ஏ. | ... 21 |
| 6. | திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள் — ஓர் ஆய்வு பழநி அரங்கசாமி | ... 26 |
| 7. | திரு. வி. க. வின் தமிழ்த் தொண்டு மு. அ. சமது | ... 34 |
| 8. | சில சொற்களின் தோற்றம் தி. அ. சொக்கலிங்கம் | ... 39 |
| 9. | டில்லிப் பயணம் பழனி. அரங்கசாமி | ... 41 |
| 10. | ந.மு. வேங்கடசாமி நாட்டார் நூற்றாண்டு விழா | ... 52 |
| 11. | நூல் மதிப்புரை வேண்டுகோள் | ... 53 |

# குறள் நெறியில் திரு.வி.க.

## (நேரிசை ஆசிரியப்பா)

புலவர்—பால—எல்லப்பிள்ளை—புதுவை.

சீரும், சிறப்பும் செறிந்த பதிகளில்
பேரும், பீடும் பொருந்திய "துள்ளம்"
தன்னில் "தண்டமிழ்த் தென்றல்" என வோதி
மன்பதை வாழ்த்தும் "கலியாண சுந்தரர்"
பிறந்தார்; பெற்றோர் உயர்வாய் வளர்த்தனர்;
திறம்படத் தீந்தமிழ், ஆங்கிலம் பயின்றார்.
சான்றோன் இவனென சகத்தார் இயம்ப
ஈன்ற பொழுதினும் இனிதே யுவந்தனர்.
ஆசான் அலுவலை அன்புடன் ஆற்றினார்.
பேசார் வசையே பிறர்மேல் கனவிலும்
"உரிமை வேட்கை" நூலில் உரைத்துள
வரிகள் வள்ளுவர் வாழ்த்தின் வாக்கே.
ஆதி நடுவிலா அகண்டித அறிவை
சோதி சுடரினன் அரங்கனைப் போற்றினார்;
'இல்லற வியலின்" இன்னமுத இசைதனை
நல்லதோர் "பெண்ணின் பெருமையில்" நவின்றார்;
சொல்லுதல் எளிதென சொற்படி செய்த
பல்தொழிற் சங்கப் பணியின் தலைவராம்
இன்னா செய்தார் நாண இன்னே
நன்னயம் செய்த நற்பண் பாளராம்.
"அன்பின் வழியது உயிர்நிலை" ஆதலால்,
அன்பையும், அருளையும் அகந்தனில் அமைத்தவர்.
"முயற்சியே முதலாய்" முனிவர் முடிவுவரை
அயரா துழைத்தார் அந்தக ராகியும்
"கொலை, புலால் மறுத்தல் "கொள்கை யுடையவர்
நிலைத்தே திருக்குறள் நெறியில் நின்றார்.
நாடு, மொழி, மதம், சமரச நட்புடன்
காடு போம்வரை கடன்களைச் செய்தார்.
அகழ்வாரைத் தாங்கும் அவனிபோல்
இகழ்வாரைப் பொறுத்தார்; ஏற்றனர் புகழே!

# தம்பிரான்படி உரைத்திறன்

டாக்டர் சு. வேங்கடராமன்

முன்னுரை: தம்பிரான்படி என்பது அரையர்சேவையின்போது, அரையர் கூறும் உரை (வியாக்யானம்) ஆகும். வைணவ ஆலயங்களில் உற்சவரின் திருமுன் நடைபெறும் முத்தமிழ்க்கலை, அரையர்-சேவை ஆகும். கொண்டாட்டம், பாசுரத்தைப் பண்ணுடன் பாடுதல், பாசுரத்தை அபிநயித்து விளக்குதல், பாசுரத்திற்கு உரிய உரையை அழகுற எடுத்துப் பேசுதல். கொண்டாட்டம் என்று ஐந்து பிரிவுகளாக அரையர் சேவை அமையும். கொண்டாட்டம் என்பது இறைவன் புகழ் பாடுதல் ஆகும். அரையர்களுக்குத் தம்பிரான்மார் (தம்பிரான் = மன்னர்) என்று ஒரு பெயர் உண்டு. ஆசார்ய ஹ்ருதயம் எனும் நூல் அரையரைத் தம்பிரான்மார் என்றே குறிப்பிடுகிறது. அரையர்-சேவையில் கூறப்படும் உரை தம்பிரான்படி ஆகும்.

ஆழ்வாரின் பாசுரங்களுக்கு எழுதப் பெற்ற உரைகளைப் படி என்று அழைப்பர். இவ்வுரைகள் யாவும் வடமொழியும் தமிழும் கலந்த மணிப்பிரவாள நடையில் உள்ளன முத்தும் (மணியும்) பவளமும் (பிரவாளமும்) சேர்ந்த மாலை போன்றது இவ்வுரை. இருமொழிகளிலும் வல்லமை பெற்றவர் இவ்வுரை செய்தனர். வடமொழி வேதம், உபநிடதம், ஆகமம், புராணம், இதிகாசம் உள்ளிட்ட பலவும் ஆழ்வார்களின் ஈரத்தமிழை விளக்கத் துணை நிற்பதை இவ்வுரைகளில் காணலாம். சமயத் தத்துவங்கள் இடை-யிடையே விளக்கப்பெற்றன. தென்சொற் கடந்து வடசொற்கு எல்லை கண்ட சான்றோர்கள் வைணவ உரையாசிரியர்கள். வைணவ உரைகள் வியாக்யானங்கள் என்று அழைக்கப்பெறும். உரைகளில் உள்ள எழுத்துக்களைக் கணக்கிட்டு, எண்களால் அவற்றிற்குப் பெயரிட்டனர். படி என்ற சொல்லை ஓர் அளவையாகப் பயன்-படுத்தினர். மெய் எழுத்துக்கள் நீங்கலாக உயிரும் உயிர்மெய்யும் 32 கொண்டது ஒரு படி ஆகும். படியைக் கிரந்தம் என்றும் கூறுவர். "ஒரு கிரந்தமாவது ஒற்று ஒழித்து உயிரும் உயிர்மெய்யும் ஆகிய முப்பத்திரண்டு எழுத்து" என்பது யாப்பருங்கலக் காரிகை.

வைணவ உரைகளில் நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்குத் திருக்குருகைப்பிரான்பிள்ளான் செய்த ஆறாயிரப்படி காலத்தால் முற்பட்டது. இராமாநுசரின் திருவுள்ளப்படி இவ்வுரை செய்யப்பட்டது. திருக்குருகைப்பிரான்பிள்ளான் காலம் கி.பி. 1062 என்பர். நாதமுனிகள் தம் மருமக்களைக் கொண்டு ஏற்படுத்திய அரையர் சேவையில், நாதமுனிகள் காலந்தொட்டே அரையர் தம்பிரான்படி கூறி வருகிறார் என்பர்.

**தம்பிரான்படி:** அரையர் கூறும் தம்பிரான்படி இன்றளவும் அச்சாகாமல் ஏட்டுச்சுவடியிலே அரையர்களிடம் உள்ளது. மதுரகவி ஆழ்வாரின் 'கண்ணிநுண் சிறுத்தாப்பு' பாசுரத்திற்கு அரையர் கூறும் தம்பிரான்படி மட்டும் அச்சாகி உள்ளது. அரையர்சேவை நடைபெறுங் காலங்களான பகல்பத்து, இராப் பத்து ஆகிய நாட்களில் அரையர் கூறும் பாசுரங்கள் எண்ணிக்கையில் குறைவே (இன்றைய நடைமுறையில் 38). இவை, காலந்தோறும் குறைந்து வந்து உள்ளன. கோயில் ஒழுகு, வியாக்யானங்கள், குருபரம்பரை நூற்கள் ஆகியவற்றைக் காணும்போது இவ்வுண்மையை அறியலாம். எனவே, நடைமுறையில் உள்ள சேவைக்குரிய பாசுர உரைகளை அப்படியே ஏட்டில் உள்ளபடியே மனனஞ்செய்து நிகழ்ச்சியின்போது ஒப்பிக்கின்றனர். மரபுவழியாகச் செவியால் கேட்டுக்கேட்டு வாய்மொழியாக வளரும் இவ்வுரைகளை அவ்வப்போது ஏடுகளில் புதிதாகப் பிரதி எடுத்துக் கொள்கின்றனர்.

**சுவடியின் நிலை:** இக்கட்டுரைக்கு அடிப்படை ஆதாரமாக ஆழ்வார் திருநகர் வடபத்ரசாயீ சாரங்கன் அரையர் அவர்களிடமுள்ள ஏட்டுச் சுவடி கொள்ளப்பட்டுள்ளது. ஏட்டின் நீளம் $14\frac{1}{2}$ அங்குலம்; அகலம் $1\frac{1}{4}$ அங்குலம். இருபக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளது. இரு துளை இடப்பட்டு உள்ளது. ஓலை எழுதி 150 ஆண்டுகளுக்குள் இருக்கும். இடையிடையே சில ஏடுகள் சிதிலமடைந்ததால், பெரியவர்கள் மாற்றி எழுதியிருப்பர் என்பதைக் கையெழுத்து மாற்றம் காட்டுகிறது. பகல்பத்து ஏடு, முத்துக்குறி ஏடு, இராப்பத்து ஏடு என்று முப்பிரிவுகளாக உள்ளன. முதல் ஏட்டின் முதல் பக்கத்தில் திருமுடியடைவு (அரையர்களின் வமிசாவளி, மேலையகத்தாழ்வான் திருவமிசம் என்ற குறிப்புடன்) உள்ளது. இரண்டாம் பக்கம் பெருமாள், ஆழ்வார் படங்கள் உள்ளன.

பகல்பத்து ஏட்டின் இறுதி ஏட்டின் (77 ஆம் ஏடு) இறுதிப் பக்கத்தில் 'திருநெடுந்தாண்டகம் முடிவு-திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்'- 'நாதமுனிகளுடைய தாசன் அப்பன் ஏறியருளப் பண்ணியது' என்ற குறிப்பு உள்ளது. [தற்போது ஆழ்வார் திருநகரி ஆலய அரையரின் பாட்டனாராகிய நாதமுனிதாசன் அப்பன் எழுதிய ஏடு இது.

**ஆய்விற்குரிய பகுதி**: திருமங்கை ஆழ்வாரின் திருநெடுந்தாண்டகம் முதல் பதினோரு பாசுரங்களின் ('மின்னுருவாய்' என்பது தொடங்கி 'பட்டுடுக்கும்' என்ற பாசுரம் முடிய) உரை இவ்வாய்விற்குரியதாகிறது. இவை, பகல்பத்தின இறுதிநாள் அன்று அரையர்சேவையில் இடம்பெறுகிறது. அரையர் சேவிக்கும் பாசுரங்களிலே எண்ணிக்கையில் இது மிகுந்ததும் நீண்ட உரை உடையதும் ஆகும். இதன் காரணமாக சேவை நிகழும் காலம் நீண்டு இருப்பது ஆக அமைவது இந்நாளிற்குரிய சிறப்பு ஆகும் பொதுவாக, அரையர்சேவையில். பாசுரத்திற்கு மட்டுமே அபிநயம் உண்டு. ஆனால், திருநெடுந்தாண்டகம் சேவிக்கும் நாளில் மட்டும் பாசுரத்திற்கு மட்டுமின்றி, உரைக்குப் அபிநயம் உண்டு. அரையரின் ஏட்டுச்சுவடியில் அபிநய வாக்கியம் என்ற குறிப்புள்ளது [முத்துக் குறி ஏட்டில் 21 இடங்களில் அபிநய வாக்கியம் என்றுள்ளது].

**உரை அமைப்பு**: திருநெடுந்தாண்டக முதல் 11 பாசுரங்களை உள்ளடக்கிய இந்நிகழ்ச்சி முத்துக்குறி எனப்படும். 'பட்டுடுக்கும்' என்று தொடங்கும் பாசுரத்திற்குரிய உரை கூறப்படும் நிகழ்ச்சி முத்துக்குறி ஆகும் இப்பாசுரத்தின் ஈற்றடியில் 'கட்டுவிச்சி சொல் என்னச் சொன்னாள்' என்ற தொடருக்கு ஏற்ப, பள்ளி கொள்ளாமல் கிடக்கும் தலைவிக்கு ஏற்பட்ட நோயை அறிய, கட்டுவிச்சி, முத்துக்களைக் கொண்டு குறி பார்ப்பதால், இந்நிகழ்ச்சி இவ்வாறு பெயர் பெற்றது. பாசுரத்தின் போக்கில் காதல் கைம்மிக்க தலைவியைக் கடல் வண்ணர் காத்துக்கொள்வார் என்று கட்டுவிச்சி குறி சொல்லி முடிப்பாள். அரையர்சேவை வழக்கில் இந்நாளைய நிகழ்ச்சி முழுவதும் (பதினோரு பாசுரங்களுக்குரிய நிகழ்ச்சி) இப்பெயர் பெற்றது. திருநெடுந்தாண்டகத்தில் மூன்றாம் பாசுரத்தில் ('திருவடிவில்' என்று தொடங்குவது) பெருவடிவில் கடலமுதம் கொண்டகாலம் என்று வருகிறது. எனவே, பாற்கடல் கடைந்த இந்த நிகழ்ச்சி அமிர்தமதனம் எனப்படுகிறது. புராண நிகழ்ச்சியான பாற்-

கடல் கடைந்ததை அமிர்தமதனம் என்று குறிப்பிடும் வழக்கம் பரதரின் நாட்டிய சாத்திரத்தில் உள்ளது. அரையர் அபிநயிப்பதால் இந்நிகழ்ச்சிக்கு அமிர்தமதனம் என்ற நாட்டியசாத்திர வழக்கையே பெயராக்கினர்.

உரைத் தொடக்கம் நீண்ட அவதாரிகையுடன் உள்ளது. முதல் பாசுர உரை நீண்டதாக உள்ளது. அடுத்து, 'பாருருவில்' என்ற இரண்டாம் பாசுரத்தில் மூவுருவம் என்று வருவதால், அயன், அரன், அரி மூவர் இயல்பும் கூறி, திருமாலின் பரத்துவத்தில் அனைத்தும் அடக்கம் என்று நிலைநாட்டும் நீண்ட உரை உள்ளது. மூன்றாம் பாசுரத்தில் அமிர்தமதனம் வருகிறது. அதுவும் நீண்ட உரை. 'இந்திரற்கும்' என்ற நான்காம் பாசுரத்தில் செந்திறத்த தமிழோசை வடசொல்லாகி என்று வருவதால் அவற்றின் விளக்கம் அமைகிறது. அடுத்து 5, 6, 7 ஆகிய பாசுரக் கருத்துக்கள் தொகுத்-துரைக்கப்படுகின்றன. இவற்றில் ஐந்தாம் பாசுரத்தில் ஒண்மிதி என்று வருவதால், திருவடிச் சிறப்பு விரித்துரைக்கப்படுகிறது. ஏழாம் பாசுர இறுதியில் வரும் 'பூங்கோவலூர் தொழுதும் போது நெஞ்சு' என்ற பகுதி விரித்துரைக்கப்படுகிறது. அடுத்து 8,9 ஆம் பாசுரக் கருத்துக்கள் தொகுத்துரைக்கப்படுகின்றன ஒன்பதாம் பாசுரத்தில் வரும் 'மதிட்கச்சியூராய்' என்ற பகுதி மட்டும் விரித்துரைக்கப்படு-கிறது. 10-ஆம் பாசுரக் கருத்துரை தொகுத்துரைக்கப்படுகிறது. அதில், 'தென்னானாய், வடவானாய், குடபாலானாய், குணபால-மதனாய்' என்ற பகுதிகள் விரித்துரைக்கப்படுகின்றன.

இறுதியில், 'பட்டுடுக்கும்' என்ற 11ஆம் பாசுரம் முத்துக்குறி ஆக விரித்துரைக்கப்படுகிறது. மகளின் நோய் இன்னதென்று அறியாத தாய், கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்படுத்திக் குறி பார்க்குமாறு வினவுகிறாள். அவளும் கட்டுப்படுத்தி, நோய்செய்தவன் கடல்வண்ணன் என்று உணர்ந்து கூறுகிறாள். கட்டுவிச்சி குறி பார்க்கும் நிலை விரிவாக உரையில் இடம்பெறுகிறது. பரகாலரின் பாசுரத்தில் உள்ள கட்டுவிச்சி என்ற சொல்லை வைத்து, நீண்ட வியாக்யானத்தை - தமிழின் முதல் குறம் இலக்கியத்தை - முத்துக்-குறியாக அரையர் தருகிறார். இப்பகுதி நீண்டதாக, 10 ஏடுகள் உள்ள பகுதியாக அரையரின் தம்பிரான்படியில் உள்ளது.

**உரைத்திறன்:** வைணவ உரைகள் திருக்கோயில்களில் காலட்சேபமாக எடுத்துரைக்கப்பெற்றவை. ஆகவே, அவைகளின்

அடிப்படை நோக்காக, வைணவ சமயத்தத்துவங்களைக், கேட்போர் பிணிக்கும் தகையவாய் எடுத்துரைக்கும் பாங்கு மிகுதியும் இருக்கக் காணலாம். அரையரின் பண்ணும் கூத்தும் அடுத்தடுத்து இடம்பெற, அவற்றை அடுத்து இத் தம்பிரான்படி உரைக்கப்பெறும். எனவே, எளிய மக்களையும் ஈர்த்துச் சமய உண்மைகள் கண், செவிப்புலன்களுக்கு விருந்தளிக்க வல்லதாக அரையர்சேவை அமையும். இப்பாங்கிற்கு ஏற்ப, மக்களை-பார்வையாளர்களை-மனத்தில் கொண்டு அரையர்சேவை அமைகிறது. இக்கலையின் நோக்கமே, மக்கள் உணர்வதற்காக, ஆழ்வார் பாசுரங்களை இயலும் இசையும் கூத்துமாக வெளியிடுவதாகும். எனவே, இப்பாங்கிற்கு ஏற்ற கூறுகளும் திறன்களும் தம்பிரான்படி உரையிலும் அமையக் காணலாம்.

உரைவகை: வைணவ உரையாசிரியர்கள் அனைவரும் ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்காற்பட்டு, திருமாலின் கலியாண குணங்களை அனுபவித்தவர்கள். ஆழ்வார்களின் உள்ளக்கிடக்கையைத் தாமுணர்ந்து, அதைத் தம் உரைகளின் வழி மற்றவர்களுக்கும் அவர்கள் உணர்த்தி வந்துள்ளனர். இதனால்தான் 'ஆன்மீக அனுபவ இன்பம் என்று வைணவமரபை அழைக்கலாம்' என்பர். இந்த, ஆன்மீக அனுபவ இன்ப நுகர்தல் என்பதை மையமிட்டு அரையர்சேவை அமைகிறது. உரைகூறும் பாங்கில் அரையர் இதனை மையப்படுத்துகிறார். சொற்பொருள் கூறல், அன்வயப் படுத்துதல், பொழிப்புரை, விளக்க உரை, விருத்தியுரை என்ற வகைகளில் மட்டும் அமையாமல், சிலவிடங்களில் தொகுப்புரையாகவும் உள்ளது. இறைவனின் பரத்துவம் கூறல், வைணவத் தத்துவம் கூறல், புராண-அவதார நிகழ்ச்சி கூறல், இறைவன் திருவடிப் பெருமை கூறல், இறைவனின் கலியாண குணங்களைக் கூறல், அர்ச்சாவதார மேன்மை கூறல், ஆழ்வார்களால் மங்களாசாசனஞ் செய்யப்பெற்ற தலச்சிறப்பு கூறல் ஆகியவிடங்களில் விருத்தியுரை காணப்படுகிறது. ஏனையவிடங்களில் தொகுப்புரையாகத் தரும் பாங்கு உள்ளது. இவ்விடங்களில் பாசுரம் உரைநடை வடிவில் தரப்படுகிறது.

வைணவ உரையாசிரியர் மரபு, இராமாநுசரின் சீடரான திருக்குருகைப்பிரான்பிள்ளான் முதல் தொடங்குகிறது. இவர், திருவாய்மொழிக்கு ஆறாயிரப்படி எழுதினார். இவர் உரையில் சில பாசுரங்களுக்கு விருத்தியுரை கூறும் பாங்கும், சிலவிடங்களில்

தொகுப்புரை கூறும் பாங்கும் கலந்து காணப்படுகிறது. முன்னதற்கு 'அஞ்சிறைய மடநாராய்' (திருவாய்மொழி 1-4.1) என்ற பாசுரமும், பின்னதற்கு 'யாம் மடலூர்ந்தும்' (திருவாய்மொழி 5-3.10) என்ற பாசுரமும் சான்றுகளாகும். அரையரின் தம்பிரான்படியில் காணலாகும் இப்பாங்கைத் திருக்குருகைப்பிரான்பிள்ளானின் ஆறாயிரப்படி உரையில் மட்டும் காண்கிறோம்.

**தொடருக்கு உரை:** பாசுரத்தின் ஒரு தொடரைக் கொண்டு நீண்ட உரை கூறும் பாங்கை அரையரின் முத்துக்குறி உரையில் காண்கிறோம். இப்பாங்கு பட்டரின் உரையில் மட்டும் காணக்கிடக்கிறது. திருமங்கையாழ்வாரின் 'மைவண்ண நறுங்குஞ்சிக் குழல் பின் தாழ, என்ற ஒரு பாசுரத்திற்கு மட்டும் பட்டர் எழுதிய நீண்ட உரை (எண்ணூறு கிரந்தம்) இதற்குச் சான்று. பட்டர் காலம் கி.பி. 1123.

**கவிதை நடை:** தம்பிரான்படி உரையின் சிறப்புக் கூறுகளுள் ஒன்று, இடையிடையே கவிதை நடை கொஞ்சும் பாங்கு. சான்றாகப் பின்வரும் பகுதிகள் காண்க:

"மானும் மழுவும் சூலமும் நஞ்சும் ஆனையுரியும் புலியின் அதளும் கொக்கின் இறகும் கொன்றையும் தும்பையும் அக்குவடமும் முக்கண்ணும் நக்கமும் விடையும் பூதமும் பேயும் வேதாளமும் சடையும் எருக்கும் சாபலும் பாம்பும் ஓடும் கந்தையும் கோவணமும் சுடுகாடும் கையினில் கனலும் காபாலீ வேஷமும் எருத்துக் கொடியும் எலும்பும் முனிவும் உருத்திரப் பேரும் உடையவன் ஒருவன்." (பகல்பத்து ஏடு - திருநெடுந்தாண்டகம், பாடல் 2)

"வாராய் மகளே! உன் வயிற்றிலே பிரசை உண்டு என்று ஏலாதன சொல்லி இரந்துண்ணும் குறத்தி அல்லேன்.

நாராயணனோடே நாலிரண்டு எழுத்து கற்ற சீரார் அருள்மாரி திறப்பேசும் குறத்தி நானே." (முத்துக்குறி ஏடு - கட்டுவிச்சி, தாயாரிடம் தன்பெருமை கூறல்).

**பாசுரப்படி உரை:** பாசுரங்களின் அடிகளை சொற்றொடர்களை - இயைபுற இணைத்து உரையாக்கியுள்ள திறனைத் தம்பி-

ரான்படியில் பரக்கக் காணலாம். வைணவ உரைவேந்தரான வியாக்கியான சக்கரவர்த்தி) பெரியவாச்சான்பிள்ளை, பாசுரங்களின் சொற்றொடர் கொண்டு பாசுரப்படி இராமாயணம் செய்தது இங்கு அறியத்தக்கது. அரையரின் தம்பிரான்படி உரையில் உள்ள இப்பாங்கு முத்துக் குறியில் மிகுதியாக உள்ளது.

சான்று:

தலைவிக்கு நோய்செய்தவன் யார் என்று அறிய கட்டுவிச்சியை அழைத்துக் குறி பார்க்கிறாள் தாய் தலைவியின் பல்வேறு செயற்பாடுகள் - நிலைகள்-பற்றி விரிவாகத் தாயிடம் கேட்டறியும் கட்டுவிச்சி, 'செய்திப்பாடு சொல்லுவீராம் என்ன, திருத்தாயாரும் இங்ஙனே சொன்னாள்:

> ''பந்தோடு கழல் மருவாள்; பைங்கிளியும் பாலூட்டாள்; பாவை பேணாள்; வந்தானோ திருவரங்கன் வாரானோ என், றென்றே வளையும் சோரும். தாய் வாயிற்சொல் கேளாள்; தன் ஆயத்தோடணையாள்; தடமென் கொங்கையே ஆரச்சாந்தணியாள்; பொருகயற்கண் மையெழுதாள்; பூவை பேணாள். துளம்படு முறுவல் தோழியர்க்கருளாள்; துணைமுலைச் சாந்து கொண்டு அணியாள்; வளம்படு முன்னீர் வையம் முன்னளந்த மால் என்னும்; 'ஊழியில் பெரிது நாழிகை' என்னும்; ஒண்சுடர் துயின்றதால் என்னும்; ஆழியும் புலம்பும்; அன்றிலும் உறங்காது; தென்றலும் தீயினில் கொடிதாம் என்னும்; பொங்கு வெண்மணல் கொண்டு சிற்றிலும் முற்றத்து இழைக்கலுறில் சங்கு. சக்கரம் தண்டு,வாள், வில்லும் அல்லது இழைக்கலுறாள்.'' (முத்துக்குறி ஏடு)

இப்பகுதி முழுவதிலும் திருமங்கையாழ்வாரின் பெரிய திருமொழியும் (1-5), பெரியாழ்வாரின்திருமொழியும் (6) இணைந்து வந்துள்ளன.

பிறர் நிர்வாஹம் கூறல்: உரைகளில் காணப்படும் பொதுக்கூறுகளான அவதாரிகை, சொற்பொருள் கூறல், பல்பொருள் கூறல், நுட்பஉரை கூறல், இயைபு காட்டல், மேற்கோள் காட்டல், முடிப்புரை கூறல் ஆகியன காணப்படுகின்றன. வைணவ உரைகளில் காணலாகும் பிறர் நிர்வாஹம் கூறல் என்ற உத்தி அரையரின் தம்பிரான்படியில் காணப்படவில்லை. (உரையின் இடையில், தமக்கு முன் வாழ்ந்த சான்றோர் இவ்வாறு கூறினார் என்று எடுத்துக்காட்டுக் கூறித் தம் கருத்தை நிறுவுதல், பிறர் நிர்வாஹம் கூறல்

எனப்படும். சான்று: "தன்னால் வரும் நன்மை விலைப்பால்போலே; அவனால் வரும் நன்மை முலைப்பால் போலே என்று பிள்ளான் பணிக்கும்". இவ்வாறு ஸ்ரீவசனபூஷணம் நூலில் தமக்கு முன் வாழ்ந்த திருக்குருகைப் பிரான்பிள்ளான் கூறிய கருத்தைப் பிள்ளை-லோகாசாரியார் எடுத்துக் காட்டுகிறார்.)

வேதக் கருத்துக்கள், உபநிடத, புராண, இதிகாசச் செய்திகள் ஆகியவற்றை மிகுதியும் கூறுவதைத் தம்பிரான்படியில் காணலாகும். வேதங்களுடன் ஒருசேர வைத்து எண்ணுவதும், ஆழ்வார்களின் அருளிச்செயல்கள் தமிழ்வேதம் என்று நிலைநாட்டுவதும் நோக்கம் ஆனபடியாலே இப்போக்கு உரையில் மிகுதி. பெரியவாச்சான்பிள்ளை உள்ளிட்ட பிற உரையாசிரியர்கள் போல, வால்மீகி இராமாயணக் கருத்துக்களை மிகுதியும் சான்று காட்டும் போக்கு அரையரின் தம்பிரான்படியில் மிகக்குறைவு.

**வாக்கிய அமைப்பு:** தம்பிரான்படி உரையின் வாக்கிய அமைப்பில் வடமொழி, தமிழ் கலந்து உள்ளது. வடமொழித்தொடர்களைத் தமிழ் உருபுகளையும் வினைமுற்றுக்களையும் கொண்டு முடிக்கிறார், தம்பிரான்படிகாரர். சான்று: "இதில் முதல் பாட்டால் தேஹாத்பிமானநிவ்ருத்தி தொடக்கமான திருவடிகளோட்டை ஸம்பந்தபர்யந்தமாக ஸாக்ஷத்கரிப்பித்த உபகார பரம்பரைகளைப் பேசுகிறார்". (பகல்பத்து ஏடு - திருநெடுந்தாண்டகம் - அவதாரிகை)

**உவமை:** உரையில் உவமை, உருவகம் மிகுதியும் இடம்-பெற்றுள்ளன. அவை, உரையாசிரியர் காலச் சமுதாயநிலை, சமய-நிலை ஆகியவற்றைக் காட்டுவனவாக உள்ளன. (சான்று: கிழிச்-சீரையோடே ரத்னத்தைக் கொடுப்பாரைப் போலே'; 'ஆமத்துப் பசிக்குந்தனையும் சோறிடாத தாயைப்போலே'; 'பெருவிடாயர்க்குக் குடித்த தண்ணீர் விடாயைப் பிறப்பிக்குமாபோலே - உவமைகள்). மனித உறவு, அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் அடிப்படையில் உவமைகள் இடம் பெற்றுள்ளன. உவமைகள் உரைக்கு இலக்கியத் தன்மையை அளிக்கின்றன. சமய, தத்துவக் கருத்துக்களை விளக்க இவை பயன்படுத்தப்பட்டன.

**நாடகப்பாங்கு:** முத்துக்குறி உரையில் கட்டுவிச்சி கூற்றில் பேச்சுவழக்குச் சொற்கள் மிகுதி. கட்டுவிச்சியின் பேச்சாக வருமிடம் முழுவதிலும் வடசொல் கலப்பு இன்றி, பேச்சுவழக்குச் சொற்கள்

மிகுந்த தமிழ் நடை காணப்படுகிறது. இறுதிப்பகுதியில் தாய்கூற்றில் மட்டும் சில வடமொழித் தொடர்கள் உள்ளன. கட்டுவிச்சி கூற்று, தாய் கூற்று ஆகிய இரண்டும் கலந்த ஒன்றாக முத்துக்குறி உரை உள்ளது. கட்டுவிச்சி தன்னைத்தானே அறிமுகஞ்செய்து கொள்ளல், இயைபுபடுத்திக் காட்டல், கட்டுவிச்சியாகவும் தாயாகவும் மகளாகவும் மாறி, மாறி அரையர் ஒருவரே அபிநயத்தலில் காணப்படும் உருவாக்க எளிமை, உரையாடற் பாங்கு ஆகிய பல்வேறு நாட்டுப்புற நாடகக்கூறுகளை முத்துக்குறியில் காணலாம். நாடகப் பாங்கில், காட்சிமாற்றங்களும் காரண காரிய இயைபும் இணைந்து இவ் உரைப்பகுதி உள்ளது.

**முடிப்புத் திறன்:** பாசுரத்தில், 'கடல் வண்ணர் இது செய்தார் - காப்பார் ஆரே' என்று கட்டுவிச்சி தாயிடம் கூறுவதாக உள்ளது. அரையரின் தம்பிரான்படி உரை, கட்டுவிச்சி குறி கூறக்கேட்ட தாய், தன் மகளைப் பெருமாள் திருமுன் இட்டுப் புலம்புவதுடன் இயல்பாக முடியலாம். ஆயின், நிகழ்ச்சியைக் காணும் பார்வையாளர்களுக்குப் பெருமாளுடன் தலைவி சேர்ந்தாள் என்ற மங்கல முடிவைக் கூறவேண்டி - பரமாத்மாவுடன் உயிர் கூடியது என்ற பொருள் முடிவைத் தத்துவநோக்கில் காட்டவேண்டி - இறுதிப் பகுதியைத் தம்பிரான்படி உரைகாரர் பொருத்தமுற அமைத்துள்ளார். "உள்ளெல்லாம் உருகும்படி ஊரெங்கும் தென்றல் புகுந்து பள்ளிகொள்ளும் அரங்கனார் பாவமும் பழியும் பாரார், என் செய்கேன், ஒருமகள் தன்னை உடையேன் உலகம் நிறைந்த புகழால் திருமகள் போல வளர்த்தேன் - செங்கண்மால் தான் கொண்டு போனான் - ஓ! கடல் வண்ணர் இது செய்தார் காப்பார் ஆரே!" என்பது முத்துக்குறி உரையின் இறுதிப்பகுதி. முடிவின் இயைபிற்குப் பெரியாழ்வார் திருமொழியில் உள்ள, 'ஒருமகள் தன்னை உடையேன் என்ற பாசுரத்தை உரைகாரர் ஆள்கிறார்.

**பள்ளுப் பாட்டு :** முத்துக்குறி உரையினிடையிலும் திருநெடுந்-தாண்டக உரையின் இடையிலும் சில பாடல்கள் உள்ளன. இப்பாடல்களைப் பள்ளுப்பாட்டு என்று அழைப்பர். இப்பாடல்கள் அரையர் ஒருவரால் பள்ளர் சேரியிலிருந்தபோது பாடப்பெற்றவை. அந்த அரையரைத் திருத்திப் பணிகொண்டபோது, இறைவன் நம்பெருமாள், அரையர் பாடிய பள்ளுப்பாட்டையும் பறை இசையையும் தாமும் உகந்து கேட்டார். அன்று முதல் அரையர் மரபு வழியாக, பள்ளுப்பாடல்களைப் பறை இசையுடன் இறைமுன்பு, திருவூறல் திரு

விழா, திருமுடிசேவை. படியேற்ற சேவை ஆகிய விழாநாட்களில் பாடுகின்றனர். அவற்றுடன் கூடிய சில பள்ளுப்பாடல்கள் இவ்வுரையில் காணப்படுகின்றன (இன்றும் ஸ்ரீவில்லிப்புத்தூர் அரையர் பிற தலங்களுக்கு வந்து, சாதாரண நாட்களில் முத்துக்குறி சேவை நிகழ்த்துகையில், நிகழ்ச்சியின் இறுதியில் - தலைவி, இறையுடன் சேர்ந்ததைக் கூறியபின் - உற்சவரைக் கருவறைக்கு எடுத்துச் செல்கையில், படியேற்றத்தின்போது இப்பள்ளுப் பாடல்களைப் பாடுகிறார்.) இப்பாடல்கள் யாவும் இறைவன் புகழ்பாடும் பாடல்கள். கவிக்கூற்றாகவும் அகப்பொருள் அமைப்பில் மாந்தர் கூற்றாகவும் இப்பாடல்கள் உள்ளன. எளிய சொற்களில் உணர்ச்சிக் கூறுகள் மிகுந்தவை இவை. (''பூங்கமழும் சோலையும் நல்ல பொழிலும் கண்டு புல்லும்படியே நினைந்து, நான் பொறுக்கமாட்டேன்; தாபம் தணிய வந்து என்னை ஆரத் தழுவிக் கொள்ளீர் தண்ணரங்கரே! தனிமாலை அழகியரே'' என்பது போல அப்பாடல்கள் வரும்.)

கொண்டாட்டம்: அரையர்சேவையின் தொடக்கத்திலும் இறுதியிலும் மட்டுமே இறைவன் புகழ்பாடும் கொண்டாட்டம் கூறப்படும். ஆயின், முத்துக்குறியின்போது, கூடலிழைத்தல் நிகழ்ச்சியில் கொண்டாட்டம் கூறப்படுகிறது, தலைவி, பேதுற்ற நிலையில், 'திருமால் கூடுவாரெனில் கூடிடு கூடலே' என்று கூடலிழைக்கிறாள். இதனை அரையர் நடித்துக் காட்டுகிறார். தம்மைத் தலைவியாகப் பாவித்து, தட்டில் மணல் பரப்பி அரையர் கூடலிழைக்கிறார். 'கூடல் கூடியது' என்று பார்வையாளர்களுக்கு இறுதியில் அவர் எடுத்துரைக்கிறார். பெருமாளும் பிராட்டியும் பிரிவின்பின் இணைந்த மகிழ்ச்சியைக் கூறுவதால், இவ்விடத்தில் அரையர் கொண்டாட்டம் கூறுகிறார். முதலில் பெருமாள் கொண்டாட்டமும் ('மதகரிபோல் மதிலரங்கத்தே துயிலும் பெருமாள்'), அடுத்து நாச்சியார் கொண்டாட்டமும் ('அன்னங்கள் வந்து மென்னடை கற்கும் நாச்சியார்) கூறுகிறார். இவையும் தம்பிரான்படி உரையில் இடம்பெற்று உள்ளன.

**முடிவுரை :**

மக்களிடையே இயலும் இசையும் கூத்துமாக ஆழ்வார் அருளிச்செயல்களைப் பரப்ப முற்பட்ட அரையர், இவ்வாறு தம்பிரான்படி உரையைப் பரப்பி வருகிறார். வைணவ நூற்களுக்குரிய முருகியல் பாங்கு (aesthetic feature), மக்கள் முன் அபிநயிப்பதன் காரணமாக இவ்வுரையில் மிகுந்து உள்ளது. சமயதத்துவம் அறிந்து இறைவனிடம் ஈடுபட்டுப் பேரின்பம் அடையாது, உலக வாழ்வில் உழலும் மக்களை உய்விப்பான்வேண்டி, மக்கள் அறிந்தவற்றின் வழி, இறை அனுபவத்தை அரையர் குழைத்துத் தருகிறார்.

# ஆண் மக்கட் பெயர்கள் - ஓர் ஆய்வு

அ. நடராசன் B. Sc, M.A, M Phil

**முன்னுரை :-**

தமிழ் இலக்கிய ஆய்வின் போக்கு இக்காலத்தே விரிவடைந்து வருகிறது இலக்கண, இலக்கியம் பற்றிய ஆய்வு மட்டுமே ஆராய்ச்சி என்ற நிலைமாறி, நாட்டுப்புறவியல், ஊர்ப்பெயர், இடப்பெயர், மக்கட் பெயர் என்றின்ன பல்வேறு கோணங்களில் ஆய்வு விரிவடைந்-துள்ளது. இவ்வாய்வுகள் ஒருவகையில் சமுதாயவியலை மையமாகக் கொண்டுள்ளதாகக் கூறலாம். மக்கட் பெயர் பற்றிய இக்கட்டுரையும் இவ்வகையின்பாற்படுவதாகும்

**ஆய்வுக்களம் :-** இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஒன்றியத்தில் உள்ள 'பூவந்தி' என்ற ஊரில் உள்ள மக்கட் பெயர்கள் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

மக்கட் பெயர்களை ஆண் மக்கட் பெயர்கள், பெண்மக்கட் பெயர்கள் என்ற இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். இக்கட்டுரை ஆண்மக்கட் பெயர்களைப்பற்றி மட்டுமே விளக்க விழைகின்றது.

**ஆண்மக்கட் பெயர்களின் வகைகள் – காரணங்கள்**

பெயர்களின் அமைப்பு அடிப்படையில் கீழ்க்கண்டவாறு வகைப் படுத்தலாம்.

1. தெய்வப் பெயர்கள்
2. மரபுப் பெயர்கள்
3. சமயப் பெயர்கள்
4. பட்டப் பெயர்கள்
5. மறைந்து வரும் பெயர்கள்
6. பிற பெயர்களின் தாக்கம்
7. தாக்கம் ஏற்படக் காரணங்கள்

8. மக்கட் பெயர்க் கொள்கை

9. மக்கட் பெயர் பற்றிய சிலமுடிவுகள்

## 1. தெய்வப் பெயர்கள் :

தமிழகத்தில் மனிதர்களுக்குத் தெய்வப் பெயர்களை, இட்டு வழங்குவது தொன்றுதொட்டு வரும் மரபு. மக்கள் தெய்வத்தின் பால் கொண்டுள்ள பக்தியின் காரணமாக இம்மரபு ஏற்பட்டுள்ளதெனலாம் எந்த மதத்தவராக இருப்பினும் தத்தமது தெய்வங்களின் பெயர்களைத் தங்களுடைய இளைய தலைமுறையினருக்கு இட்டு வழங்குவது தெரிய வருகின்றது.

இப்பெயர்கள் பெருந்தெய்வம் சிறு தெய்வம், ஆகியவற்றின் பெயர்களாலும் அமைந்துள்ளது. "புராண இதிகாச ஆகமப்படி சிவன், திருமால் ஆகிய தெய்வங்கள் பெருந்தெய்வங்களாகவும், முருகன், விநாயகர், காளி, மாரி, கருப்பு, அக்கினி, வீரன், அய்யனார் போன்ற காவல் தெய்வங்கள் சிறு தெய்வங்களாகவும் கருதலாம். தெய்வங்கள் பிறப்பு, இறப்பு இல்லாதவை. பெருந்தெய்வங்களின் சக்தி வரையறுக்கப்பட முடியாதவை. பெருந் தெய்வங்கள் உயிர்ப்பலி ஏற்றுக் கொள்ளமாட்டா. சிறு தெய்வங்களின் சக்தி வரையறுக்கப்பட முடியும். பலியினை அவை ஏற்றுக் கொள்ளும். சிறு தெய்வங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

### 1.1 பெருந்தெய்வங்களின் காரணமாகப் பெயர்கள்:

ஆண் மக்கட் பெயர்களில் பெருந்தெய்வப் பெயர்கள் காணப்படுகின்றன.

எ-டு: 1. ஈசுவரன்

2. சொக்கன்

3. நடராசன்

4. சொக்கலிங்கம்

போன்ற பெயர்கள் சிவன் பெயராலும்,

1. திருமால்
2. பெருமாள்
3. இராமன்
4. அழகர்
2. கிருஷ்ணன்

போன்ற பெயர்கள் திருமால் பெயராலும் அமைந்திருக்கக் காண்கிறோம்.

1. தெய்வங்களின் மேல் மக்கள் வைத்துள்ள பக்தியின் காரணமாகத் தெய்வப்பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

2. பெருந்தெய்வங்களின் தன்மை, செயல் காரணமாகவும் பெயர்கள் அமைந்துள்ளமை தெரிகிறது. தில்லையில் நடனம் புரிந்த சிவனைக்குறித்துத் 'தில்லை நாயகம்' என்ற பெயர் வைக்கப்படுகிறது கிறது. கடம்பவனத்தில் திருவிளையாடல் புரிந்த சிவனின் செய்கை காரணமாக மனிதர்களுக்கும் 'கடம்பவனம்' என்ற பெயர் வைக்கப், படுகிறது.

3. அழகர் கோவிலில் உள்ள பெருமாளைத் தங்கள் குல தெய்வமாகக் கொண்டுள்ள மக்கள் 'பெருமாள்' 'அழகர்' 'அழகு-மலை' 'அழகர்சாமி' 'அழகரப்பன்' போன்ற பெயர்களைச் சூட்டிக் கொண்டுள்ளனர்.

4. திருப்பதி வெங்கடேசப் பெருமாளை வணங்கும் மக்களிடம் 'சீநிவாசன்'. 'வெங்கடேசன்', 'பெருமாள்' 'ஏழுமலையான்' போன்ற பெயர்கள் காணப்படுகின்றன.

5. திருப்புவனத்தில் குடி கொண்டுள்ள இறைவனான பூவணநாதரை (சிவனை) வணங்கும் மக்கள் தங்கள் வாரிசுகளுக்குப் 'பூவணநாதன்' 'புவனேஸ்வரன்' போன்ற பெயர்களைச் சூட்டியுள்ளனர்.

## 1.2. சிறுதெய்வங்கள் காரணமாக ஏற்பட்டுள்ள பெயர்கள்

கிராமப் புறங்களில்தான் சிறு தெய்வங்கள் மிகுந்து காணப்படுகின்றன. சிறு தெய்வங்கள் பற்றிய ஆய்வு வளர்ந்து வருகிறது?

இச்சிறுதெய்வங்கள் யாவை? இவை தோன்றக் காரணம் என்ன. மக்களால் இத் தெய்வங்கள் வணங்கப்படுவதற்குரிய காரணம் என்ன? என்பன பற்றிச் சிந்தித்துப் பார்த்தால் பல செய்திகள் வெளியா-கலாம்.

இன்று சிறு தெய்வங்களாக மக்களால் வணங்கப்படுபவை அனைத்தும் ஒரு காலத்தில் மனிதர்களாகவே இருந்திருத்தல் கூடும். இறந்தவர்களின் நினைவாக நடுகல் இடும் பழக்கம் தொல்காப்பியர் காலத்திலேயே காணப்படுகிறது.

தொல்காப்பியச் சூத்திரம் புறத்திணையியலில் வெட்சித்-திணைத் துறைகளைக் கூறுமிடத்து,

> ''காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
> சீர்த்தகு சிறப்பார் பெரும்படை வாழ்த்தலென்று
> இருமூன்று வகையிற் கல்லொடு புணரச்
> சொல்லப்பட்ட எழுமூன்று துறைத்தே''

என்று நடுகல் அமைப்பதற்குரிய வினையமைதிகள் ஆறனையும் ஆசிரியர் கூறுவார்.

''இந்நடு கற்கள் இறந்தவரின் உறவினராலோ நெருங்கிய நண்பராலோ ஏற்படுத்தப்பட்டன என்று நாம் கருதலாம்.[1] ''மலரும் மறுவும், ஊனும், சோறும் நடுகற்களுக்குப் படைக்கப்பட்டதை நோக்குமிடத்து, பிற்காலத்திலே (இன்றுவரை) 'தாழ்ந்தசாதியினர் எனக் கருதப்படுவோர்' வேள்வி நடாத்தி மடைகொடுத்துச் சிறு தெய்வங்களை வழிபடுவது எமது நினைவிற்கு வரும். ஐயனார், மதுரைவீரன், இருளன், கறுப்பன், நொண்டி முதலியன நடுகற் தெய்வங்களை ஒத்தன வாயுள்ளன''[2] என்று சு. வித்தியானந்தனும் கூறியுள்ளமையை இங்கு ஒப்புநோக்கலாம்.

இப்போது கூட விபத்துக்களால் மரணமடைபவர்களுக்குச் சாலையோரங்களில் நடுகல் நடுவதும், அக்கல்லைச் சாலையில் செல்-வோர் வழிபடுவதும் உண்டு. இறந்தவர்களுக்குக் கல்லறை கட்டிக் கோவில் எடுக்கும் பழக்கம் இன்றும் உண்டு. இவை எதிர்காலத்தில் சிறுதெய்வங்களாக மதிக்கப்பெறும்.

---

1. க. கைலாசபதி பழந்தமிழர் வாழ்வும் வழிபாடும், பக்.53
2. சு. வித்தியானந்தன், தமிழர் சால்பு, பக். 112

மனிதப் பெயர்களில் இச்சிறு தெய்வங்களின் பெயர்கள் காணப்படுகின்றன.

முனிச்சாமி
முனியாண்டி
முனியன்
காளி
மாரியப்பன்
வீரன்
சின்னன்
கருப்பையா
கருப்புச்சாமி
பாண்டி

மக்கள் அச்சம் காரணமாகவும், வேண்டுதல் காரணமாகவும் சிறுதெய்வப் பெயர்களைத் தமது குழந்தைகளுக்குச் சூட்டுகின்றனர். 'பாண்டிமுனி கோவில்' என்பது மதுரைக்குச் சற்றுக் கீழ்த்திசையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த முனியை மக்கள் தெய்வமென மதித்து வணங்கி வருகின்றனர். இந்தமுனி பெண்களைப் பிடித்துக் கொள்ளும். உடுக்கு வைத்து அடிக்கும் பொழுது ஆவி பிடித்துள்ள பெண்கள் மூலமாக முனி பேசும். மக்கள் அந்தப் பெண்ணை விட்டு விலகி, அப் பெண்ணுக்கு எந்தவித இன்னலும் வராது காத்தால் அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கு அம்முனியன் பெயரைச் சூட்டுவதாக வேண்டி வாக்களிப்பர். இதன்பின் முனி விலகிக் கொள்ளும். இவ்விதம் ஏற்பட்ட பின் பிறக்கும் குழந்தைகளுக்கு அப்பெற்றோர் 'பாண்டி,' 'பாண்டியம்மாள்' எனப் பெயரிடுகின்றனர். சிலர் குழந்தை வேண்டுமெனப் பாண்டிமுனியிடம் வேண்டிக்கொண்ட பின் பிறக்கும் குழந்தைகளுக்கும் 'பாண்டி' என்ற பெயர் சூட்டுகின்றனர்.

இதுபோலவே வெள்ளைச்சாமி, முனியாண்டி போன்ற பெயர்களும் வைக்கப்படுகின்றன.

## 2. மரபுப் பெயர்கள்:

பெயர்கள் வழிவழியாக வைக்கப்பட்டு வருகின்றன. தங்கள் குலத்தில் வாழ்ந்து மறைந்த, வாழ்கின்ற சிறப்புடையவர்களின்

பெயர்களைத் தங்கள் குழந்தைகட்கு வைக்கும் பழக்கம் இன்றும் காணப்படுகிறது.

ஒரு குடும்பத்தில் வீரன் என்பவன் சிறப்புடையவனாக இருந்திருக்கின்றான். அவனுடைய பெயர், அவனுடைய வாரிசுகளுக்கு 'வீரன்'. 'வீரணன்', 'பெரிய வீரணன்', 'சின்ன வீரணன்', 'அதிவீரன்', 'அக்கினி வீரன்' போன்ற வெவ்வேறு பெயர்களால் வழங்கப்படக் காணலாம். 'வீரன்' என்ற பெயர் தெய்வப் பெயராகி வழ்ங்கி வந்துள்ளமை தெரிகிறது. பின்னாளில் அப்பெயரே குலத்தில் சிறந்த தாத்தா, பாட்டன், பெயர்களைச் சூட்டுவது என்ற முறையில் வருகிறது.

மக்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயரிடுவதில் பல்வகை மரபுகளைப் பின்பற்றி வந்துள்ளனர். ஒரு குடும்பத்தில் முதல்குழந்தையேயன்றி இரண்டாவது குழந்தையும் பிறந்து இறந்து விடுகின்றது. மூன்றாவதாகப் பிறக்கும் குழந்தை ஆணாகவிருப்பின் அக்குழந்தைக்கு மூக்குக் குத்தி 'மூக்கன்' என்று பெயரிடுவர். முதல் இரண்டு குழந்தைகள் பிறந்து, இறந்த பின் பிறக்கும் மூன்றாவது குழந்தையுடன் அந்தத் தாய், அவள் வசிக்கும் தெருவில் வீட்டுக்கு வீடு சென்று, தனக்கு மூன்றாவது குழந்தை பிறந்துள்ள விபரத்தைக் கூறிப் பிச்சை எடுப்பாள். அப்போது ஒவ்வொரு வீட்டிலும் உள்ள பெண்கள் தங்களாலியன்ற பொருளைக் கொடுப்பர். இவ்வாறு கிடைக்கும் பணத்தைக் கொண்டு 'தங்கத்தில், மூக்கில் குத்தும் தட்டு' செய்து, மூக்குக் குத்தி, 'மூக்கன்' என்றும் 'பிச்சை' என்றும் பெயர் வைக்கும் பழக்கம் இன்றும் காணப்படுகிறது. இவ்விதம் சடங்குகள் செய்து பெயரிட்டால் அக்குழந்தை நீண்ட ஆயுளுடன் இருக்கும் என்பது நம்பிக்கை.

தொடர்ந்து குழந்தைகள் பிறந்து இறந்து விடுமானால், அடுத்துப் பிறக்கும் ஒரு குழந்தையைத் 'தவிட்டுக்கு வாங்குவது,' எனற பழக்கம் இன்றும் உளளது. அவ்வூரில் அதிகமாகப் பிள்ளை பெற்ற தாயிடம் தங்கள் குழந்தை பிறந்தவுடன் கொடுத்து விடுவர். பின்னர் தங்கள் வீட்டில் இருந்து 'தவிடு' கொண்டு சென்று கொடுத்துப் பிள்ளையைத் திரும்ப வாங்கிக் கொண்டு வருவர். இவ்விதம் தவிடு கொடுத்து வாங்கும் குழந்தைக்குத் 'தவிடு' என்றே

பெயர் சூட்டுகின்றனர். இப்பழக்கம் சிலவிடங்களில் 'தவிடு'க்குப் பதில் 'பணம்' கொடுத்து வாங்குவதாக மாறி வருகின்றது.

ஒரு குடும்பத்தில் பிறக்கும் முதல் குழந்தை ஆணாக இருப்பினும், பெண்ணாக இருப்பினும் தங்கள் குல தெய்வத்தின் பெயரையே அக் குழந்தைக்குச் சூட்டுகின்றனர். இம்மரபு இன்றும் மாறாமல் காணப்படுகிறது. இவ்விதம் சூட்டும் குலதெய்வப் பெயர்களே நிலைக்கப் பெறும். சிலவேளைகளில் நாகரிகம் காரண-மாகப் பெயர் மாற்றம் ஏற்படுவதுண்டு. சிலவேளைகளில் குலதெய்-வத்தின் பெயரும் தங்களுக்கு விருப்பமுடைய வேறு பெயரும் சேர்ந்தே அழைக்கப்படும். கருப்பு என்ற மனோகரன். இப்பெயரில் கருப்பு என்பது குலதெய்வப் பெயர். மனோகரன் நாகரிகம் காரணமாக வைக்கப்பட்ட பெயர். இருப்பினும் படித்தவர்களாயினும் சரி, கிராம மக்களாயினும் சரி, தங்கள் குழந்தைக்கு முதன்முதலில் தங்கள் குலதெய்வப் பெயரைச் சூட்டுவது இன்றும காணப்படுகிறது.

ஐந்தாவதாகப் பிறக்கும் குழந்தை ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் 'பஞ்சவர்ணம்', 'பஞ்சு', 'பஞ்சை' என்ற பெயர்களைச் சூட்டுகின்றனர்.

ஆறாவதாகப் பிறக்கும் குழந்தை 'ஆறுமுகம்' என்றும், ஏழாவது குழந்தையாக இருப்பின 'ஏழப்பன்' என்றும் பெயரிடு-கின்றனர்.

பெயர்வைக்கும் மரபுகளைக் கொண்டு அக்குழந்தையைப்-பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஆனால் 'இரண்டிற்குமேல் வேண்-டாம்' என்று தீவிரப்படுத்தப்பட்டு வரும் இந்நாட்களில் பஞ்சு, பஞ்சவர்ணம், ஆறுமுகம், ஏழப்பன், பாக்கியம் போன்ற பெயர்கள் இப்பொழுது மறைந்து வருவதில் வியப்பு இல்லை.

இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தால் அக்குழந்தைகளுக்கு 'இராமன்', 'இலக்குவன்' என்று பெயரிடுகின்றனர். சிலர் 'முருகன், சரவணன்' என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர். இது அவர்-களுடைய ஒற்றுமையை வலியுறுத்துவதாக அமைந்துள்ளமை போற்றத்தக்கதாகும்.

# கைதை — ஓர் ஆய்வு

—பா. மல்லிகா

தமிழன் இயற்கையோடு இயைந்து வாழ்வு நடத்தினான். எனவே அவனது மொழியில் இயற்கைப் பொருள்களின் பெயர்கள் பெருவழக்கில் அமைகின்றன. இயற்கையின் கொடையான பூக்களில் தொண்ணூற்றாறு வகைகளைத் தமிழன் இனங்கண்டு சங்க காலத்திலேயே குறிஞ்சிப்பாட்டில் குறிப்பிட்டுள்ளான். அப்பூக்களில் ஒன்றாகத் தாழையும் இடம் பெற்றுள்ளது. இதனைக் குறிஞ்சிப்பாட்டின் எண்பதாவதுவரி எடுத்தோதுகிறது. தமிழன் ஒரே பூவிற்குப்பலபெயர்களையும் சூட்டியுள்ளான். இங்குத் தாழம்பூவிற்கு அவன் வைத்த பெயர்களைக் காண்போம்,

1) தாழை — குறிஞ்சிப்பாட்டு வரி 80

2) கைதை — பெரிய புராணம் 10 : 4

3) தாழம்பூ — பேச்சு வழக்கில் உள்ளது.

இம்மூன்று பெயர்களுள் கைதை என்னும் சொல் தமிழில் இன்று வழக்கிறந்து விட்டது. ஆனால் அண்டை மொழியான மலையாளத்தில் இப்பெயர் இன்றும் பேச்சு வழக்கில் உள்ளது.

தமிழில் உள்ள ஐகாரம் மலையாளத்தில் 'அ' ஆதல் இயல்பு.

| | தமிழ் | மலையாளம் |
|---|---|---|
| எ. டு: | மலை | மல |
| | தலை | தல |
| | கலை | கல |

எனவே கைதை என்பது கைத என்றாகி கத என்றாகியுள்ளது. 'கத' என்னும் சொல்லாட்சி மலையாளத்தில் 'கதை'யைக் குறிக்கஉள்ளது. எனவே தாழம்பூவைக் குறிக்கும் சொல்லை 'கயித' என மலையாளிகள் மாற்றினர். இச்சொல் இன்றும் மலையாள நாட்டில் வழக்கில் உள்ளது.

அதனோடு மட்டுமல்லாமல் அச்சொல்லிலிருந்து வேறு பெயரையும் மலையாளிகள் உருவாக்கி உள்ளனர். அவர்கள் கயிதப் பூவின்செடி போல் உள்ள மற்றொரு செடியையும் பார்த்தனர். ஒரே மாதிரியான

பன்மடல் கொண்ட செடிகளாய் இரண்டும் காணப்படுதலால் இரண்டிற்கும் 'கயித்' என்று பெயரிட்டனர். ஒன்றன் செடியில் பலாப்பழம் போன்ற பழம் வருவதைக் கண்டனர். பலாப்பழத்தை மலையாளிகள் 'சக்க' என்பர். அதுபோலவே கயிதச் செடிபோலுள்ள செடியிலும் பழம் வருவதைக் கண்ட அவர்கள் அதனையும் சக்க என்றனர். செடியிலிருந்தும், பழத்திலிருந்தும் வேறுபடுத்திக்காட்ட எண்ணிய மலையாளிகள் 'கயிதச் சக்க' என்று அதற்குப் பெயரிட்டனர்.

'கயிதச் சக்க' என்பது தமிழில் கூறப்படும் அன்னாசிப் பழத்தை குறிக்கும். தமிழில் தாழம்பூவிற்கும், அன்னாசிப் பழத்திற்கும் சொற்களின் வடிவில் ஒற்றுமையில்லை. ஆனால் மலையாளத்தில் இரண்டிற்கும் வடிவில் ஒற்றுமை உண்டு.

கயித — தாழம்பூ

கயிதச் சக்க — அன்னாசிப்பழம்

தாழம்பூவிற்கும் அன்னாசிப் பழத்திற்கும் உள்ள வடிவத் தொடர்பை ஆங்கில மக்களும் இனங்கண்டு உள்ளனர்.

Screw Pine flower — தாழம்பூ

Pine apple — அன்னாசிப் பழம்

மேற்கண்ட சொற்கள் அவற்றிற்குரிய வடிவ ஒற்றுமையைக் காட்டுகின்றன.

திராவிட மொழிகளின் வேர்ச்சொல் அகராதி (D.B.D) தாழம்பூவிற்குத் தரும் சொற்களை ஆராய்வோமெனில் அந்நூல் மலையாளத்திற்குரிய கலைச்சொல்லைத் தரவில்லை. மற்ற மொழிகளில் தாழம்பூவிற்கும், அன்னாசிப் பழத்திற்கும் சொற்களின் வடிவில் ஒற்றுமை காணப்படவில்லை.

வேர்ச்சொல் அகராதி மறுபடியும் பதிப்பிக்கப்பட்டபோதிலும் மலையாளத்தில் தாழம்பூவைக் குறிக்கும் சொல் கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தாழம்பூவைக் குறிக்கும் சொல்லாக கைதை, கயித என்பன முறையே தமிழ், மலையாளத்தில் காணப்படுதல் நோக்கத்தக்கது.

# திரு. வி. க. வும் அரசியல் தலைவர்களும்

-ஆ. திருநாகலிங்கம், எம். ஏ.,

**முகவுரை :**

20-ம் நூற்றாண்டில் சுதந்திரப் போராட்டங்களில் கலந்து கொண்டு போராடியவர் பலர். இந்தப் போராட்டங்களில் தமிழகத்திலும் பலர் கலந்து கொண்டனர். தமிழகத்தில் காங்கிரஸ் கோட்டையை உருவாக்கிச் சுதந்திர இந்தியாவிற்கு வித்திட்டவர்களில் திரு. வி. கலியாண சுந்தரனாரும் ஒருவர் ஆவர். இவர் தம் அரசியல் வாழ்வில் பல தலைவர்களுடன் தொடர்புகொண்டு, பொது நலத் தொண்டு செய்துள்ள நிலையை அவர் வாழ்வியல் வண்ணங்கள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

**திரு. வி. க.வும் அன்னிபெசன்ட் அம்மையாரும் :**

இந்தியாவிற்கு சுயஆட்சி வாங்க வேண்டும் என்ற நோக்கில் போராடியவர்களில் அன்னிபெசன்ட் அம்மையார் குறிப்பிட்ட இடத்தைப் பெறுகிறார். இவர் சென்னைநகரைத் தனது போராட்டத் தலமாக ஆக்கிக்கொண்டு அரசியலில் வேரூன்றுகிறார். 1914-ஆம் ஆண்டு ஐரோப்பிய போர் மூண்டது அந்தப் போரின் எதிரொலி இந்தியாவிலும் பரவியது. அன்னிபெசண்ட் அம்மையாரும் சென்னையில் சுயராஜ்யக் கிளர்ச்சியை நடத்துகிறார்.

இந்தக் கிளர்ச்சியைக் கண்ட திரு. வி க.வும் கல்லூரி ஆசிரியர் வேலையிலிருந்து வெளியேறி அரசியல் வாழ்வில் அடியெடுத்து வைக்கிறார். சமுதாயத் தொண்டே பெரிது எனக் கருதுகிறார். தொழிலாளர் இயக்கங்களில் பங்குகொண்டு தொண்டாற்றுவதில் முனைப்பாக நின்றவர் திரு.வி.க. ஆவார். சமுதாயத்திற்கு உண்மையான தொண்டு செய்ய வேண்டும் என்ற நோக்கில் 'தேசபக்தன்' என்ற தமிழ் இதழையும் திரு.வி.க. துவக்குகிறார்.

திரு. வி. க. வை அரசியல் வாழ்விற்கு அறிமுகப்படுத்தியவர் மட்டுமன்று; இன்று நாம் போற்றிப் புகழக்காரணமாகவும் துவக்கத்தில் அமைந்தவர் அன்னிபெசன்ட் அம்மையாரே ஆவார். திரு. வி. க.வும்

அன்னிபெசன்ட் அம்மையாரும் சில நேரங்களில் சிறந்த நண்பர்களாக வளர்ந்தவர்கள் என்றாலும் அரசியல் வாழ்வில் நிரந்தரமான தொண்டர்களாக இருந்து மக்களுக்குப் பணிவிடைகள் செய்தவர்களாவர்.

**திரு. வி. க.வும் திலகரும்:**

மற்ற அரசியல் தலைவர்களிடம் பழகியதுபோல் திரு.வி க. திலகருடன் நீண்ட நாட்கள் பழகவில்லை. பழகியது மொத்தம் மூன்று நாட்களே ஆகும். இந்த மூன்று நாட்களும் திரு.வி.க. வாழ்வில் சிறந்த நிகழ்ச்சியாக அமைகின்றன.

1919-ஆம் ஆண்டில் சிதம்பரம் பிள்ளையுடன் திரு.வி.க. திலகரைச் சந்திக்கின்றார். திலகருடன் தங்கிப் பணிவிடைகளும் செய்கிறார். ஒருநாள் ஓய்வு நேரத்தில் அரசியல் பற்றிச் சிலர் உரையாடிக் கொண்டிருக்கின்றனர். திரு.வி.க.வும் அதில் கலந்து கொள்கிறார்.

திலகருடன் உரையாடும்போது திரு.வி.க. மார்க்சிசத்தைப் பற்றியே கிளறுகிறார். திரு.வி.க. எப்போதும் சமதர்ம அரசியலிலேயே முனைப்பாக நின்றவர், மார்க்சிசத்தைக் கிளறும்போதெல்லாம் திரு. வி.க.வின் உள்ளம் இந்தியாவில் அதனைக் கொண்டு வரவே முனைப்பாக நின்றிருந்திருக்கிறது. திலகரும் 'மார்க்சிசத்தை இந்தியர்கள் ஏற்றுக்கொள்ளும் காலமும் வரும்' என்று திரு.வி.க.விடம் கூறுகிறார்.

திரு.வி.க.வும் திலகரும் மார்க்சிசத்தை எதிர்க்கவில்லை. அதனை அடையும் வழிமுறைகளுள் சில மாறுதல்கள் வேண்டுமென்றே விரும்புகின்றனர். திலகருடைய மூன்று நாட்பழக்கத்தில் திரு.வி.க. ஒரு மார்க்சியத் தொண்டனாகவே காட்சியளிக்கிறார். திலகருடன் நிரந்தரத் தொடர்பு கிடைத்திருந்தால் திரு. வி க.வின் அரசியல் வாழ்வில் பல மாறுதல்கள் நிகழ்ந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது.

**திரு. வி. க.வும் ராசாசியும் :**

1908-ஆம் ஆண்டு சேலத்தில் திரு.வி.க, ராசாசியைச் சந்திக்கிறார். அன்று முதல் இருவரும் தனிப்பட்ட முறையில் மட்டுமன்று;

அரசியல் வாழ்விலும் நண்பர்களாகி விடுகின்றனர். காங்கிரசின் கொள்கைகளையும், செயல்பாடுகளையும பொதுமக்களுக்கு எடுத்து விளக்குகின்றனர். மக்களுடன் இருவரும் இரண்டறக் கலந்தே நிற்கின்றனர்.

1937-இல் தமிழகத்தில் ராசாசி தலைமையில் காங்கிரஸ் மந்திரிசபை பதவி ஏற்கிறது. ராசாசி முதலமைச்சராகப் பதவி ஏற்கிறார். இதற்குப் பின் திரு.வி.க.வுக்கும் ராசாசிக்கும் அரசியல் ரீதியில் கருத்துவேறுபாடுகள் தோன்றுகின்றன. இந்திப்பிரச்சனையில் திரு வி. க., ராசாசியுடன் முற்றிலும் வேறுபடுகிறார்.

ராசாசி தலைமையிலிருந்த மந்திரிசபை. தொடக்கத்தில் நன்முறையில் ஆண்டுவந்த போதிலும் காலபபோக்கில் சில அடக்கு முறைகளைக் கையாண்டது. திரு. வி. க.விற்குப் பிடிக்கவில்லை. இதனால் அரசுக்கு எதிராக திரு.வி.க. செயல்படுகிறார். இது திரு.வி.க.வின் நேர்மையான அரசியல் உள்ளத்தை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது. தொழிலாளர் பிரதிநிதியான திரு. வி. க., ராசாசியை அரசியல் ரீதியில் எதிர்க்க வேண்டிய அவசியத்திற்குள்ளாகிறார். திரு.வி.க வையும் ராசாசி மந்திரிசபை எச்சரித்தது.

தவறு யார் செய்தாலும் அதை எதிர்த்துப் போராட வேண்டும் என்பது திரு.வி.கவின் வாழ்வியல் நியதியாக அமைந்துவிட்டதையே திரு.வி.க. -ராசாசி தொடர்புகள் எடுத்துக்காட்டுகின்றன காந்தியத்திலிருந்து வழுவியதாலேயே ராசாசி மந்திரிசபை கவிழ்ந்தது என்கிறார், திரு. வி. க. இது அவரது காந்தியப் பிடிப்பையும் ராசாசி தலைமையில் இருந்த காங்கிரஸ் மந்திரிசபையில் நடந்த தவறுகளையும் கோடிட்டுக் காட்டுவதாக அமைகிறது. ராசாசியும் திரு.வி.க. வும் கொள்கையால் காங்கிரஸ் கட்சியை ஏற்றுக்கொண்டவர்கள் என்றாலும் உட்கட்சிப் போராட்டங்களுக்கு இரையாகி இருக்கின்றனர் என்பதை அவர்கள் அரசியல் வாழ்வு தெளிவுபடுத்துகிறது.

**திரு. வி. க.வும் ஈ.வெ.ரா.வும் :**

1919-ஆம் ஆண்டில் ஈரோடு காங்கிரஸ் மாநாட்டில் சந்தித்துப் பேசிக் கொண்ட திரு.வி.க.வும், ஈ.வெ ரா.வும் தொடர்ந்து காங்கிரஸ் கோட்டையைத் தமிழகத்தில் வலிமையாக்கி வந்தனர். இதில்

திரு வி.க.வை விட ஈ.வெ ரா காங்கிரசுக்குச் செய்த தொண்டுகள் பலவாகும். இதைத் திரு வி.க.வே சொல்கிறார்.

> ''முன்னாள் தமிழ்நாட்டில் காங்கிரஸ்
> தொண்டு செய்தவர் என்ற முறையில்
> எவருக்கேனும் பரிசில் வழங்கப்
> புகுந்தால் முதல் பரிசில் நாயக்கருக்கே
> செல்வதாகும்.''

அரிய நண்பர்களாக வாழ்ந்த இருவரும் கொள்கையால் வேறுபடு-கின்றனர். 1925-ஆம் ஆண்டில் கூடிய காஞ்சி மாநாடு இருவரை-யும் பிரிக்கிறது. சமுதாயத்தில் எந்த இனமாக இருந்தாலும் சம தர்மநிலையில் மதிக்கப்படம்வண்டும் என்பது திரு.வி.க.வின் உள்ளம். சமுதாயத்தில் தாழ்ந்த சாதியினர்களும் உயர் சாதிக்காரர்களைப். போல் சமஅந்தஸ்துபெறவேண்டும் என்பது ஈ.வெ.ரா.வின் எண்ணத் துடிப்பு. இருவருக்கும் சாதி ஒழிப்பு என்கிற கருத்தால் வேறுபாடில்லை அதைச் செயல்படுத்துவதிலேயே வேறுபாடு தோன்றியது.

சுதந்திரப் போராட்ட காலகட்டங்களில் பிராமணர் செல்வாக்கு எல்லா நிலையிலும் உயர்ந்தும் மற்ற இனத்தினர் நிலை மிகமோச மாகவும் இருந்திருக்கிறதுஎன்பதையேஇருவரின் கருத்துவேறுபாடுகள் காட்டுகின்றன. திரு.வி.க. சொல்லுவதுபோல் பிராமணர், பிராமணர் அல்லாதோர் என்ற பாகுபாடு தேவையற்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். சமுதாயத்தில் உயர்வு, தாழ்வு மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசமாக இருப்பதை அகற்ற பிராமணரோ அல்லது காங்கிரஸ் அரசோ முயற்சி எடுக்கவில்லை. இதனாலேயே ஈ.வே ரா. காங்கிரசை விட்டு வெளியேறுகிறார். குடியரசு மூலம் திரு.வி.க வைத் தாக்குகிறார். 1924 இல் ஈ.வெ.ரா. வைக்கத்தில் தீண்டாமைப் போர் நடத்தி வரலாறு படைத்தவர். காங்கிரசிலிருந்து, ஜஸ்டிஸ் கட்சிக்குள் நுழைந்து, சுயமரியாதை கண்டது ஈ.வெ.ரா.வின் வாழ்வு. திரு.வி க. ஆரம்பகாலம் முதல் இறுதி வரை ஒரு ஊழலற்ற உண்மையான காங்கிரஸ் தொண்டனாக இருந்தவர். கொள்கையால் வேறுபட்டாலும் உள்ளத்தால் அன்பால் பண்பட்ட அரசியல்வாதி கள் ஈ.வெ.ரா.வும் திரு.வி க.வும் ஆவர்.

முடிவுரை :

திரு.வி.க. தம் அரசியல் வாழ்வில் பல தலைவர்களைச் சந்தித்து பொதுத்தொண்டாற்றியிருக்கிறார் வாழ்வின் ஆரம்ப காலகட்டம் முதல் இறுதிவரை ஒரே அரசியல் சமதர்ம முறையிலேயே இருந்து வந்துள்ளார். அரசியல் தலைவர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்ட காலங்களிலும் தமது பண்பட்ட அரசியலைத் தமிழுலகிற்கு வெளிக்காட்டத் தவறவில்லை. தீண்டாமை என்னும் சாபம் உள்ள வரை பாரதமாதா சிறையினின்று விடுதலை பெறமாட்டாள் என்பது திரு. வி. க.வின் வாசகங்கள். இந்த விடுதலைபெற அதிகார வர்க்கத்தை எதிர்த்துப் போராடவேண்டும் என்பதும், ஒருமித்த ஆதரவுடன் அவர் அவாவை நிறைவேற்ற வேண்டியதும் இன்றைய இளைய சமுதாயத்தின் கடமையாகும்.

கண்ணபிரான் கையினிலே குழலைக் கொண்டான்!
    கவினார்ந்த புன்முறுவல் இதழில் கொண்டான்!
கண்ணனெனும் வெண்ணிலவால் உலகம் யாவும்
    களி பொங்கும்! பொன்னொளியே எங்கும் மேவும்!
கண்ணன் முன் கருமேகம் நின்றிடாது
    கண்ணனைவே றெதுவுமிங்கு வென்றிடாது!
கண்ணனது திருப்பாதம் தன்னை விட்டால்
    கவலையை நான் எவ்விடத்தில் கொட்டித் தீர்ப்பேன்?

பொன்னலலிப் பூப்போன்ற கோபியர் நெஞ்சைப்
    பொட்டென்றோர் நிமிடத்தில் திருடி விட்டான்!
என்னெஞ்சக் கோயிலிலும் நுழைகின் றான் என்
    இதயத்தை ஆன்மாவை அறிவை எல்லாம்
கொன்றழிக்கும் வேய்ங்குழலின் இசையால் அவனே
    கொள்ளை கொண்டு போகின்றான் அடடா! கண்ணா!
மன்னவனே! யமுனை நதி நண்பா, என்றன்
    மாதவனே என்னையென்றும் மறந்திடாதே!

# திரு. வி.க. வாழ்க்கைக் குறிப்புகள் — ஓர் ஆய்வு

பழநி. அரங்கசாமி

அடக்கம், பணிவு போன்ற நல்லியல்புகள் தமிழகத்தில் தலைசிறந்த குணங்களாக மதிக்கப்பட்டன. 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' 'பணியுமாம் என்றும் பெருமை', 'அடக்கம் அமரருள் உய்க்கும்' என்னும் இலக்கியத் தொடர்கள் இக் கருத்தை வலியுறுத்தும் கற்றுணர்ந்தோரும் இந்நெறி பிறழாது வாழ விரும்பினர். தன்னைப் பற்றிச் சிறிதுகூட எழுதினாலோ, பேசினாலோ "தன்னை வியந்து தருக்கி" யதாகக் கருதப்படும் என்ற தவறான அச்ச உணர்வு அவரிடையே இருந்திருக்கலாம். இச் சூழ்நிலையில் தன்வரலாற்று இலக்கியம் (Autobiography) பண்டைத் தமிழகத்தில் தோன்றவில்லை என்பதில் வியப்பில்லை. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் முனிவர் பவணந்தியாரும் காலந்தழுவிய இக் கட்டுப்பாட்டின் கடுமையினைத் தளர்த்த எண்ணியோ என்னவோ

"மன்னுடை மன்றத்து ஓலை தூக்கினும்
தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னைப் புகழ்தலும் தகும் புலவோற்கே"

என்று கூறினார். புலவர்கட்குக் கொடுக்கப்பட்ட இப்புறனடையாலும் இத்துறையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் இருந்ததாகத் தெரியவில்லை.

ஆங்கில மொழியின் இடையீட்டினாலே உரைநடை, புதினம், திறனாய்வு போன்ற பல்வேறு துறைகள் தமிழில் வளர்ந்ததைப் போன்று தன்வரலாற்று இலக்கியமும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் முறைப்படி வளரத் தொடங்கியது. தன்வரலாற்று நூலின் தோற்றத்தை நடுகல், மன்னைக் காஞ்சி ஆகியவற்றோடு தொடர்புபடுத்துவது பொருத்தமற்றதாகும். இது எப்படி இருக்கிறதென்றால் நாவல் எனப்படும் புதினத்தை ஆராயப் புகுந்த ஒருவன் ஆணையும் பெண்ணையும் மையமாக வைத்தே கதைகளும், நாவல்களும் பயின்று வருகின்றன; தமிழிலக்கியத்தில் ஆணும்

பெண்ணும் சங்க காலத்திலேயே குறிக்கப்பட்டிருத்தலால், நாவலின் கரு சங்க காலத்திலேயே காணப்படுகிறது என்று கூறுவதை ஒக்கும்.

அகஸ்டின் பாதிரியார் கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் எழுதிய (Confessions) எனும் நூலே தன் வரலாற்று இலக்கியத்தின் தொடக்க நூலாக ஐரோப்பிய நாடுகளில் மதிக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் ஜான்பனியன் என்பார் தன்வரலாற்று நூல்களுக்கு அடிகோலியவர் எனலாம். அமெரிக்க நாட்டில் பெஞ்சமின் பிராங்க்லின், ஸ்டூவர்ட் மில், ஹென்றி ஆடம்ஸ் ஆகியோர் சிறந்த தன்வரலாற்று நூல்களை எழுதியோராவார்.

தமிழ் இலக்கிய உலகில் பாரதியார், வ.உ.சி. போன்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் தன்வரலாற்று நூல்களின் முன்னோடிகளாகக் கருதப்பட்டாலும், முறையான தன்வரலாற்று நூலை எழுதிய பெருமை பம்மல் சம்பந்த முதலியாருக்கே உரியது. நாடக மேடை நினைவுகள் என்னும் தலைப்பில் இவர் வெளியிட்ட இந் நூலின் ஆறு பகுதிகளும் இந் நாடகப் பேராசிரியரின் வாழ்க்கையை மட்டுமன்றி அவர் காலத்தில் தமிழ் நாடகக்கலை வளர்ந்த முறையினையும் திறம்பட விளக்கிச் செல்கிறது. உ.வே. சாமிநாத அய்யரின் வாழ்க்கைக் குறிப்புகள் சிற்சில தொகுப்பு நூல்களிலும் 'என் கதை' எனும் நூலிலும் காணக்கிடைக்கின்றன. அறிவு முதிர்ச்சியும் எழுத்தாற்றலும், நாவன்மையும் வாய்க்கப் பெற்ற தமிழ் அறிஞர்களான பண்டிதமணி, ந.மு. வேங்கடசாமி நாட்டார், சி.வை. தாமோதரம் பிள்ளை, ஞானியார் சுவாமிகள், மறைமலையடிகள், வையாபுரிப் பிள்ளை போன்றோர் தத்தமது வரலாற்று நூலை எழுதியிருப்பின் நமக்கெல்லாம் அன்னோர்தம் வாழ்க்கை சிறந்த வழிகாட்டிகளாக இருந்திருக்கும்.

திரு. வி.க. அவர்கள் தன்வரலாற்று நூலை மிக விரிவாகத் தாம் எழுதவில்லை என்று கூறினாலும், அவரது வாழ்க்கைக் குறிப்புகள் (Memoirs) ஒரு முழுநூலுக்குரிய விரிவும் ஆழமும் உடையதாக உள்ளன. பள்ளியில் சென்று பாடத்திட்டத்தின்படி நிறைவுறப் பயிலாதவர் திரு. வி.க. கல்லூரியில் சேர்ந்த சின்னாட்களுக்குள் கால், கை முடங்கிவிட்டது. வரம்புக்கு உட்பட்டுப் பயிலும் பள்ளி மாணவனாக இன்றி, காலவரம்பின்றித் தேன் குடிக்கும்

வண்டுபோல் அல்லும் பகலும் அருந்தமிழை மாந்திப் பெரும் புலமை எய்தினார். சைவசமயச் சண்டமாருதமாகத் திகழ்ந்த ஈழத்துப் பெரும் புலவர் கதிரைவேற்பிள்ளையை நிழல்போலத் தொடர்ந்து இலக்கண இலக்கியம் கற்றார். ஆன்மீக இலக்கியங்களும், சித்தாந்த சாத்திரங்களும் அவருக்கு விதிவிலக்கல்ல. ஸ்பென்சர் கம்பெனியில் எழுத்தராகச் சேர்ந்தாலும் இலக்கிய ஈடுபாடும், தொண்டு செய்யும் நோக்கமும் இவரை விட்டபாடில்லை. வெஸ்லி கல்லூரியில் தமிழ் ஆசானாகப் பணிபுரிந்த இவரை அரசியலும் பத்திரிகைத் தொழிலும் அரவணைத்துக் கொண்டன. தேசபக்தன், நவசக்தி எனும் இவரது தாள்கள் பத்திரிகை உலகில் பீடுநடைபோட்டன. விடுதலைப் போராட்டத்தில் அமிதவாதிகளுடன் சேர்ந்திருந்தாலும் மிதவாதக் கொள்கையே மீதூரப் பெற்றவர். தொழிலியக்கத் தலைமை பூண்டாலும், ஆன்மிகத் தொடர்பு அற்றுப்போகவில்லை. புலால் மறுத்தலும் உயிர்க்கொலை நிறுத்தலும் தலையாய தொண்டுகளாக இருந்தன. சரமாரியாகப் புயல்வீசும் தொழிற்சங்க மாநாடுகளில் தென்றலாகத் தவழ்ந்தவர். பல்சுவை ததும்பும் வண்ணம் கட்டுரை, கவிதை, ஆய்வு நூல்கள் எழுதி அழியாப் புகழ் படைத்தவர் இவரது சுவை நிரம்பிய வாழ்க்கைக் குறிப்புகள் இரண்டு பகுதிகளாக வெளிவந்துள்ளன.

நூலைத் தொடங்கும்போதே ''யான் ஒரு சிறுகுடிலில் பிறந்தவன்; எளிமையில் வளர்ந்தவன்'' என்று கூறுகிறார் திரு.வி க. வறுமையிற் செம்மை காணும் உயர்ந்த உள்ளத்தை அவரிடம் நாம் காணமுடிகிறது. வாழ்வின் பல்வேறு கோணங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டாலும், இலக்கியத் தொண்டு மட்டும் குறைந்திலது. கவிதை நூல்களாக நான்கும், உரைநடை நூல்களாக முப்பதும், வரலாற்று நூல் ஒன்றும் ஆக நிறைய நூல்கள் அவர் எழுதியுள்ளார்.

இவை அனைத்திலும் பெண்ணின் பெருமை என்ற நூல் இன்றுகாறும் போற்றிப் படிக்கப்பெறுவதாகும். ஆங்கில அரசவை நிகழ்ச்சி ஒன்றனை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட முடியா, காதலா, சீர்திருத்தமா எனும் நூல் விவிலிய நூலின் சாரத்தை உள்ளடக்கியது.

எத்துணைப் புலமை பெற்றிருந்தாலும், புலமைக் காய்ச்சல் இன்றிப் பிறர்தம் நுழைபுலத்தைப் பாராட்டும் பாங்கு திரு. வி.க. வுக்கு உண்டு.

''பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால்கோளிட்டவர் ஆறுமுக நாவலர்; சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை; கூரை வேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர்'' என்று வரும் பகுதியே இதற்குச் சான்று.

தொழிற்சங்கத்தில் தலைமையேற்று நேர்மை பிறழாமல், நீதி தவறாமல் பணியாற்றினார். பொதுவுடைமைத் தலைவராக இருந்த சக்லத்வலா இடிபோல முழங்குவார். ஒரு சமயம் அவரது ஆங்கிலப் பேச்சை (27-2 1927) திரு. வி.க. மொழி பெயர்த்தார். காந்தி பற்றி தவறான கருத்தைக் கொண்டிருந்த சக்லத்வாலாவிடம் அந்த மேடை-யிலேயே வாதாடி அக் கருத்தினைத் திரும்பப் பெறச் செய்தார். மாற்றார் மனமும் கனிந்து உருகுமாறு அவரைத் தன்வயப்படுத்தும் பண்பு திரு. வி க. விடம் இருந்ததற்கு இதுவே சான்று.

இலக்கிய ஈடுபாடும், ஆன்மீகப் பற்றும் இவரது உயிர்மூச்சாக விளங்கின. கதிரைவேற்பிள்ளையின் நாவன்மையில் கட்டுண்ட திரு. வி. க. அவரை ஆசிரியராகக் கொண்டு அவரிடம் பாடம் கேட்-டார். தமது ஆசானாகிய பிள்ளையவர்களைப் பற்றி திரு. வி க. கூறும் பகுதி, இதோ:

''பிள்ளை அவர்கள் நெற்றியில் நீறணிந்து, கழுத்தில் அக்க-மாலை பூண்டு, இடுப்பில் பீதாம்பரம் புனைந்து, சொன்மழை பொழிந்ததைக் கண்டோம். அம்மழை வெள்ளத்தில் இலக்கியமும், இலக்கணமும், தர்க்கமும், சாத்திரமும், பொன்னும் மணியும் அகிலுந்-தேக்குமென உருண்டு மிதந்தன. காளமேகமெனக் காட்சி தந்த கதிரைவேற்பிள்ளையின் கோலமும் பேச்சும் என்னை ஆண்டன.''

நேரில் பார்த்தறியாதோருக்கும் அவர் உருவத்தை ஒளிப்-படமாகக் காட்டும் இப்பகுதியில் அந்த ஈழத்துப் பெரும் புலவர் நிமிர்ந்து நடைபோடுகிறார். திரு. வி.க. வின் அழகிய தமிழ் நடைக்கும் இது ஒரு சான்று.

திரு. வி.க. வின் ஆன்மீகப் பற்றும் இறையுணர்வும் பொதுமை நோக்கத்தை உடையன. ''எட்டுச் சைவத்தால் யாது பயன் விளையும்?

சாதிச் சைவர்கள் சமூகச் சீர்திருத்தத்தில் ஈடுபடுங்கள்'' என்று 1912-ஆம் ஆண்டில் சைவ சித்தாந்த மகாசமாஜ மாநாட்டில் வேண்டுகோள் விடுத்தார் திரு.வி.க. பழைய நெறிமுறைகளில் ஈடுபாடு கொண்டாருக்கு இது பிடிக்கவில்லை. இவர்களோடு போராடுவதில் பயனில்லை என்றுணர்ந்தார் திரு.வி.க. கண்மூடித்தனமான சைவ நெறியினின்றும் விலகி சமரச சன்மார்க்கத்தில் ஈடுபடுத்திக் கொண்டார்.

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயம் செய்து
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற் கேற்றதாகும்''

என்னும் அப்பர் தேவாரத்தை மனத்துட்கொண்டார். மதக்காழ்ப்பின்றி வைணவம், ஜைனம், பௌத்தம், கிறித்தவம், இஸ்லாம் ஆகிய அனைத்து மதங்களிலிருந்தும், வேதாந்தம், சித்தாந்தம், பிரம்மஞான சங்கம், சன்மார்க்கம் ஆகிய அனைத்து நெறிகளிலிருந்தும் அவ்வவற்றின் நல்லியல்புகளை அறிந்து கொண்டார்.

தமது 29-ஆம் வயதில் தொடங்கிய திரு.வி.க. வின் திருமண வாழ்க்கை (13-9-1912) ஆறு ஆண்டுகளே நீடித்தது. அன்புத் துணைவி கமலாம்பிகை அவர்களை என்புருக்கி நோய் ஆட்கொண்டது. உலக வாழ்க்கையினை நீத்த சடலங்களை மக்கள்

'சூரையங் காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே'

என்பார் திருமூலர். 'யான் நீரில் மூழ்கினேன்; என் மனைவியின் நினைவு அழியவில்லை' என்கிறார் திரு.வி.க. உறவினர் தொடங்கிய மறுமணப் பேச்சு திரு.வி.க. வின் செவிகளில் ஏறவில்லை. பருவுடல் மறைந்தாலும் உள்ளத்திரையில் பதித்திருந்த தமது மனைவியின் நினைவிலேயே வாழ்ந்தார்.

பெண்மைக்குத் திரு.வி.க. கொடுத்த மதிப்பு அளப்பரியது பால்ய விவாகக் கொடுமையினைக் கண்டித்துச் சாரதா சட்டத்தை ஆதரித்த திரு.வி.க., வாழ்க்கையில் வழுக்கி விழுந்தோரைச் சட்டரீதியாகக் கைதூக்கி விடுதல் வேண்டும் என்ற கருத்தினைத்

தாம் நடத்திய தேசபக்தன் இதழில் வலியுறுத்தி வந்தார். கலப்பு மணத்தையும், கைம்பெண் மணத்தையும் பாராட்டினார். அடையாறு தியாசாபிகல் மன்றத்தில் வசித்த அருண்டேல் என்ற வெள்ளையர், ருக்மணியைத் திருமணம் புரிந்தபோது வ.உ.சி, சுப்பிரமணிய சிவா போன்ற நாட்டுப்பற்று மிகுந்த தலைவர்கள் இதனைக் கண்டித்தனர். இந்து, மித்திரன் போன்ற தேசிய நாளிதழ்களும் எதிர்த்தன. கலப்பு மணத்தை ஆதரித்த திரு.வி.க. மணமக்களை அழைத்துத் தொழிலாளர் சங்கத்தில் வாழ்த்துக் கூறினார்.

மனைவியின் மரணத்திற்குப் பிறகு துறவுள்ளமும், தொழிற்சங்க ஈடுபாட்டில் துவங்கிய தொண்டுள்ளமும் என்றும் மறைந்ததில்லை. அறுபதாம் ஆண்டு மணிவிழாக் கண்ட இம்முதறிஞர் உடல்நலம் பேணிய முறை போற்றத்தக்கதாகும். காபி, டீ அருந்துவதில்லை, புகைப்பதில்லை புகைப்பது நமது நாட்டுக்கு ஒத்ததன்று. குளிர் நாட்டவரைப் பார்த்து வெம்மை நாட்டார் ஏன் நடித்தல் வேண்டும் என்பதே திரு.வி.க. கேட்கும் வினா. மேலும் வெற்றிலை பாக்கும் போடுவதில்லை.

'உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாம்
கிண்ணன் எம்பிரானே என்று கண்கள் நீர்மல்கி'

என்பதை இலக்கிய ரசனை பொங்கப் படித்து மகிழ்வார். அவ்வளவே.

அறுபதாண்டு கால வாழ்க்கையினை உயிரோவியமாகக் காட்டும் திரு.வி.கவின் வாழ்க்கைக் குறிப்புக்களில் அவரது சமகாலத்திய அறிஞர் பெருமக்களைப் பற்றிய பல்வேறு செய்திகள் கிடைக்கின்றன. மத உணர்விலும், மொழிக்கொள்கையிலும் தொழிலாளர் போராட்டங்களிலும் அவரிடம் மாறுபட்ட கருத்தைக் கொண்டோர் பலர் அவர்களைப் பற்றி எழுதும்போதும் தமது கருத்தை வலியுறுத்திக்காட்டுவதோடு அமைந்துவிடுவார். எந்த காழ்ப்புணர்ச்சியும் காட்டுவதில்லை. அன்பின் வயப்பட்ட இந்த அருந்தமிழ்ப் பேரறிஞரிடமிருந்து இன்றைய மனித சமுதாயம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் இது.

திரு.வி.க வின் மொழிப்பற்று பிறமொழிகளை வெறுத்து ஒதுக்கியதில்லை. வடமொழி கற்றால் தமிழ் மாண்டா போகும்? என்று கேட்டவர் திரு.வி.க. நமது மொழியும் பேச்சும் நமது மூச்சோடு பிறந்தது. காலச் சூழ்நிலையில் பிறமொழி அறிவும் இன்றியமையாதது என்பதை உணர்ந்தவர் அவர். இந்நாளையத் தமிழகம் அறிந்து பின்பற்றத்தகும் கொள்கை இது.

திரு வி க.வின் தமிழ்நடை புயல்போல வீசுவது அன்று. ஆற்றொழுக்கானதும் அன்று. தென்றல் போல் தவழ்ந்து பூமாரி யாய்ப் பொழிவது. சொல்லோட்டமும் பொருளாழமும் பொதிந்து படிக்குந்தொறும் படிக்குந்தொறும் நெஞ்சிலே பதியும் நீர்மையது. திரு.வி.க. அவர்கள், மறைமலை அடிகளாரைப் போன்று தனித்தமிழ்ப் பற்றினை இயக்கமாக்கியதில்லை.

''வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொலலாகும்மே''

என்னும் தொல்காப்பியநெறி திரு.வி.க.விற்கு முற்றும் உடன்பாடே. எனவேதான் ஆசுபத்திரி, காரியாலயம், ரெவரெண்ட் என்றே எழுதுகிறார். இற்றைக்காலத்தில் வழக்காற்றில் நாம் புகுத்தியுள்ள மருத்துவமனை, அலுவலகம், மறைத்திரு போன்ற சொற்கள் புழக்கத்தில் இல்லை. ஒளிவுமறைவின்றி வாழ்க்கையில் நிகழ்ந்த அனைத்தும் சொல்லப்படும் என்பது பொது நியதி. இருப்பினும் எவ்வச் செய்திகளை, எந்த அளவு சொல்ல வேண்டும் என்பது ஆசிரியரின் உரிமை. திரு.வி.க. வாழ்ந்தகாலத்தில் அருட்பா-மருட்பா போராட்டம்உச்சகட்டத்தில் இருந்தது. பழுத்த சைவராகவிளங்கி திரு மறைப்பற்றும், புலமையும் கொண்ட ஆறுமுக நாவலர், கதிரைவேற்-பிள்ளைபோன்றோர் வடலூர் இராமலிங்கனாரின் பாட்டுகள் அருட்பா என்று கூறத்தகுவன அல்ல; அவை மருட்பா, அவற்றை அருட்பா என்று அழைக்கக்கூடாது என்று ஆணையிடக்கோரி நீதிமன்றத்தில் வழக்காடினார். கதிரைவேற்பிள்ளையின் சார்பில் சாட்சியம் கூறியவர் திரு.வி.க. தமதுநூலில் இதுபற்றி நிறைய செய்திகளைச் சொல்லி-யிருக்கலாம். ஆயினும் கீழ்க்காணும் வரிகளைத் தவிர வேறொன்றும் அவரது வாழ்க்கைக் குறிப்புக்களில் கிடைத்தில. ''கதிரைவேற்-பிள்ளை வாழ்வு கண்டனங்களில் கழிந்தது. என் மனமும் அதில்

தோய்ந்து நெளிந்தது. விரைவில் அது திரும்பி சமரச சன்மார்க்கத்தை வேட்டலாயிற்று.'' வழக்கில் வள்ளலாரை எதிர்த்தார் என்பதைவிட பிள்ளையின்மீது கொண்ட பற்றினாலும் பாசத்தினாலுமே சாட்சியம் சொன்னார் திரு.வி.க. எனறு கொள்ளல் தகும்.

கவிஞர், கட்டுரையாளர், பத்திரிகையாசிரியர், தொழிற்சங்கத் தலைவர், விடுதலை போராட்ட வீரர், என்றின்ன பல்வேறு நிலைகளில் பணிபுரிந்த ஒரே தமிழாசிரியர் என்ற பெருமை திரு.வி.க. விற்கு மட்டுமே உண்டு. ஆழ்ந்த மொழிப்பற்றும், இறையுணர்வும் சன்மார்க்க நெறியும், நல்லொழுக்கமும், இன்றைய சமுதாயம் திரு.வி.க.விடமிருந்து கற்றுக்கொள்ளத்தகும் உயரிய பண்புகளாகும்.

### ஞானமும் பக்தியும்

பாலைப் போன்றது மனம். இந்த மனத்தைக் குடும்பமாகிய தண்ணீரில் வைத்தால், பாலும் தண்ணீரும் கலந்து விடுகின்றன, ஆகவே பாலைத் தனியான இடத்தில் வைத்துத் தயிராக மாற்றி, சாதனைகள் பழகுவதன் மூலம் ஞானம், பக்தி எனும் வெண்ணெயைத் திரட்டி எடுக்க வேண்டும். அப்பொழுது அந்த வெண்ணெயைச் சம்சாரமாகிய குளிர்ந்த தண்ணீரில் சுலபமாக வைத்திருக்கலாம். அதாவது பக்தியும், ஞானமும் சம்சார பந்தத்தில் கலந்து விடாமல் தனிப்பட நிலைத்திருக்கும்.

— இராமகிருஷ்ணர்

# திரு. வி. க. வின் தமிழ்த் தொண்டு

மு.அ.சமது
நாகர்கோவில்

''தமிழ்த்தாயைப் புதுப்போர்வையால் ஒப்பனை செய்து அரியாசனத்தில் அமர்த்தச் சூள் கொண்டெழுங்கள்! பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்'' என்று செந்தமிழ் நாட்டினரைத் தட்டி எழுப்பியவர் 'தமிழ்த் தென்றல்' திரு. வி. கலியாணசுந்தரனார் ஆவார்.

காலக்கரை அறியா கன்னித் தமிழ் மகளுக்கு நலம் பல சேர்த்தவர். எது தமிழ்? என்றவர்க்கு, இது தமிழ்! எனக் காட்டி, அமிழ்தூறும் இசைத்தமிழ் நீதானம்மா! எனப் போற்றித் தமிழ் வளர்த்தப் பெருந்தகை திரு.வி.க. ஆவார். இதனால்தான் திரு.வி.க. அவர்களை, ''திரு.வி.க. என்றாலே ''தமிழ்'', திரு.வி.க. என்றாலே ''தமிழ்நாடு,'' என்று கீ.இராமலிங்கனார் புகழ்ந்துள்ளார்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்'' ஞானசம்பந்தரைக் கண்ட தமிழுலகு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் - 'நாளும் எழுத்தாலும் பேச்சாலும் தமிழ் பரப்பிய' திரு. வி. க.வைக் கண்டது.

''தமிழ் மொழிச் சொற்களான யாழ், குழல் ஆகியவற்றிலுள்ள 'ழ' கரங்களை உச்சரிக்கின்ற போது, என் நாவிலே அமிழ்தூறுகிறது'' என்று பேசிய அண்ணல் திரு.வி.க. அவர்கள், தமிழ் மொழியின் மீது கொண்ட பற்று ஆழமானது. அப்பற்றினால் அன்னார் தமிழுக்குச் செய்த தொண்டுகள் போற்றுதற்குரியன.

திரு.வி.க. தன் எழுத்தாற்றலால் தமிழை வளர்த்தார். தன் பேச்சாற்றலால் தமிழை வளர்த்தார்.

திரு வி.க.வின் பேனா தாள்களின் முன்னால் தலைகுனிந்த-போதெல்லாம் தமிழ் மொழி தலைநிமிர்ந்து நின்றது. அவரது நா அசைகின்ற போதெல்லாம் அங்கே தமிழ்ச் செல்வி நர்த்தனம் ஆடி நின்றாள்.

எழுத்தாற்றலால் தமிழ் வளர்த்த இவரது திறத்தைப் பார்க்கின்றபோது, நமக்கு முதலில் தென்படுவது அவர் தமிழ் உரைநடைக்கு ஆற்றிய தொண்டுதான்.

ஐரோப்பியர் வருகையால் நம் நாட்டின் அரசியலில் மட்டும் மாற்றம் ஏற்படவில்லை. நாட்டிலுள்ள ஒவ்வொரு மொழியிலும் மாற்றம் ஏற்பட்டது தமிழ் மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து எழுதவும் பேசவும் செய்தனர். இதனால், தூய தமிழ் நடை வேண்டும், தனித்தமிழ் போற்றப்பட வேண்டும் என்ற எண்ணத்துடன் மறைமலையடிகள், உ. வே. சாமிநாத ஐயர், வையாபுரிப் பிள்ளை போன்றோர் தங்கள் தங்கள் தமிழ் நடைகளைச் செவ்விய தமிழ்நடையாகப் போற்றிப் பேணினர்.

திரு. வி. க. அவர்களும் இதேக் கருத்துடையவராகத்தான் இருந்தார் என்றாலும், காலத்தின் மாறுதலுக்கு ஏற்பப் புதிய முயற்சிகள் தமிழ்நடையில் அமைய வேண்டும் என்ற எண்ணத்துடன், தமிழ் உரைநடையில் தனக்கென ஒரு பாணியை வகுத்துக் கொண்டார்

"மொழி நடை என்பது, அவரவர் இயற்கைக்கேற்ற வண்ணம் அமைவது", என்று கூறிய திரு வி.க. அவர்கள், தன்னுடைய மொழிநடையில் மூன்று விதமான நடைகள் அமைந்ததாகக் குறிப்பிடுகிறார். முதலாவது, அவரது இளமைக்கால எழுத்தில் அமைந்த நடை, என்றும்; இரண்டாவது, அவர் சங்க இலக்கியச் சார்பு பெற்ற போது அமைந்த நடை என்றும்; மூன்றாவது, அவர் பத்திரிகை உலகை அடைந்தபோது அமைந்த நடை என்றும் கூறுகிறார்.

பத்திரிகை உலகில் தொடர்ந்து எழுதியபோது அமைந்த அன்னாரது உரைநடைப் பாங்கே அவருக்கு உரியதாய் நின்று நிலைத்துள்ளது. திரு.வி.க வின் நடை, பேச்சுத் தமிழின் சாயல் பெற்ற எளிய இனிய நடை. உவமை, அணிநலன்கள் விரவி வர அமைந்த நடை. எடுத்துக்கொண்ட பொருளைச் சிறுசிறு வாக்கியங்களாக அமைத்து விளக்கும் நடை.

திரு.வி.க.வின் உரைநடைச் சிறப்புக்குச் சான்றாக, "திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள்" என்ற நூலில், திரு வி.க. அவர்கள் தான் பிறந்த திருவாரூர் மண்ணைப் பற்றிக் கூறும் பகுதியைத் தருகிறேன்.

''சோழநாடு ஒரு பசும் பரவை. அதனின்றும் பிரிந்து தேங்கி-யவை தொண்டை நாடு, நடுநாடு முதலியன. சோழநாடு காவிரியை நுகர்வது. அதனால் அது புனல் நாடாயிற்று. புனல்நாட்டின் முடி நீலவான்; போர்வை எழில்; அடி பைங்கூழ்; பண் மருதம்; உடைமை சோறு; ஓம்பல் விருந்து.

சோழநாட்டுத் தலைநகரங்கள் ஐந்து அவைகளின் உயிர் திருவாரூர். திருவாரூர் தொன்மைக்களன்; தெய்வங் கோயில்; கலை நிலையம்; அன்பு ஊற்று; அருள் ஆறு; அங்கே கிள்ளை தமிழ் பாடும்; அதைப் பூவை கேட்கும்.''

நான் சான்று காட்டிய இந்த ஒருபகுதியிலிருந்து திரு. வி. க. வின் உரைநடைச் சிறப்பை அறிந்து கொள்ளலாம். திரு. வி. க வின் இவ்வுரைநடை வளம், அவர் காலத்திலும், அவருக்குப் பின்னும் தமிழ் வளர்த்த பலருடைய உரைநடையை வளப்படுத்தியது எனலாம்.

மேலும், அண்ணல் திரு. வி. க அவர்கள், ஐம்பத்திரண்டு நூல்களுக்கு மேல் எழுதி, தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் அருந்-தொண்டாற்றியுள்ளார். அவரது முதல் நூல் 1906 - இல் எழுதிய ''கதிரைவேற் பிள்ளையின் சரிதம்'' ஆகும்.

காந்தியத் தத்துவங்களில் ஆழ்ந்த பிடிப்புள்ள திரு வி. க. அவர்கள், ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்ற தலைப்பில் காந்தியத்தை இலக்கியமாகப் படைத்துத் தமிழுக்குத் தந்துள்ளார்.

பெண்ணினத்தின் மாண்பை விளக்க, 'பெண்ணின் பெருமை'' என்ற நூலைப் படைத்துள்ளார். ''எப்படி வாழ்க்கை இருக்கிறது என்பதை மட்டுமல்லாமல், எப்படி வாழ்க்கை இருக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டுவதுதான் இலக்கியம்'' என்று கூறும் மேல்நாட்டறிஞர் ஒருவரின் இலக்கியச் சிந்தனையினை திரு. வி. க. வின் ''பெண்ணின் பெருமை''-யில் காணலாம். தான் வாழ்ந்த காலத்துப் பெண்களின் நிலையைச் சுட்டிக்காட்டி, பெண்களுக்குரிய இயல்பான உரிமைகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டால் அவர்களுடைய வாழ்வு எப்படிச் சிறப்புடன் அமையும் என்பதையும் எடுத்துரைக்-கிறார்.

இயற்கை இன்பத்துக்கென்று திரு வி க. படைத்த தனிநூல் 'முருகன் அல்லது அழகு' ஆகும் 'முடியா? காதலா? சீர்திருத்தமா?' என்ற நூல் எட்டாம் எட்வர்ட் மன்னன் ஒரு பெண்ணின் பொருட்டு அரியாசனத்தைத் துறந்ததை அடிப்படையாகக் கொண்ட நூலாகும் இந்நூலின் வாயிலாக உரிமையின் மாண்பையும், தியாகத்தின் விழுப்பத்தையும் வெளிப்படுத்துகிறார்

சமத்துவத்தைப் போதிப்பதற்காக, 'சமரச சன்மார்க்க போதம்', 'சமரச சன்மார்க்கத் திறவு' என்ற இருநூல்களைப் படைத்தளித்துள்ளார். ''இந்நூல்கள் கூறும் கருத்துக்களின்படி உலகம் இயங்கினால், சாதி, மதம், நிறம், மொழி நாடு முதலியவற்றால் உலகமக்கள் வேறுபடுவது ஒழியும்,'' என்று தன்நூல்களைப் பற்றித் தானே கருத்துரை வழங்கிய திரு வி.க அவர்கள், இது போன்ற பலநூல்கள் வாயிலாக உயர்ந்த கருத்துக்களை மக்கள் சமுதாயத்திற்குப் போதித்துள்ளார் தமிழைக் கருவியாகக்கொண்டு சமுதாயச் சீர்திருத்தத்திற்கும், தொழிலாளர் நலனுக்கும் பாடுபட்டவர் திரு.வி க. ஒருவரே.

மேலும், திருக்குறளின் முதல் பத்து அதிகாரங்களுக்கு அவர் அளித்துள்ள விளக்கவுரையும், பெரிய புராணத்துக்கு அளித்துள்ள குறிப்புரையும், வசனமும், பட்டினத்துப்பிள்ளையார் பாடல் திரட்டுக்கு அளித்துள்ள பொழிப்புரையும், காரைக்காலம்மையார் திருமுறைக்கு அளித்துள்ள குறிப்புரையும் அவரது தமிழிலக்கியத் தொண்டிற்கு அத்தாட்சிப் பத்திரங்களாகத் திகழ்கின்றன.

தமிழ்ப் பற்றினைத் தமிழர் நெஞ்சங்களில் வளர்த்துத் தாய்மொழிக் கல்வியின் முக்கியத்துவத்தையும் உணர்த்தியவர் திரு.வி.க. ஆவார். ''இளைஞர்களாகிய நீங்கள், 'தாய்மொழியிலேயே கலைகளைப் பயிலவேண்டும்' என்ற உறுதியைக் கொள்வீர்களானால், தமிழ்ப்பல்கலைக்கழகத்தைத் தமிழ்நாடு விரைவில் காணும'' என்று நம்பிக்கையுடன் பேசியவர் திரு.வி.க. அவருடைய கனவு இன்று நனவாகிவிட்டது. ''தொல்காப்பியரின் பொருளின்பமும், திருவள்ளுவரின் அறமும், இளங்கோவின் எழிலும், திருஞானசம்பந்தரின் பண்ணும், சேக்கிழாரின் அன்பும், கம்பரின் கவியும் நம் பெருஞ்-

செல்வம். அதனைப் போற்றிக் காப்பது நமது கடமை'' என்று நம்மவருக்கு, தமிழ்காக்க அழைப்புவிடுக்கிறார்.

இன்தமிழைப் பருகியதால் இம்மையிலேயே வீடுபேற்றினைக் கண்ட பெருந்தகை திரு.வி.க. அவர்கள். தமிழ்மொழியும், அதன் சொந்தக்காரர்களாகிய தமிழரும் உலகிலோர் உயரிடத்தைப்பெற தன் வாழ்நாளைச் செலவழித்தவர். தமிழ் வளர்த்த செம்மல்; தமிழ்த்தென்றல் திரு.வி. கலியாண சுந்தரனார் வழிநின்று சுந்தரத்-தமிழை உயர்வில் ஏற்றுவோம்!

காவியை உடுத்தி டாமல் கமண்டலம் எடுத்திடாமல்
காட்டிடை அலைந்திடாமல் கனலிடை நலிந்திடாமல்
பூவுலக தனைச் சுத்தப் பொய்யென்றும் புகன்றிடாமல்
புறத்தொரு மதத்தினோரைப் புண்படப் பேசிடாமல்
சேவைகள் செய்தாற் போதும்; தெய்வத்தைத் தெரிவோம் என்று
தெளிவுறக் காட்டினாய் உன் தினசரி வாழ்க்கை தன்-னால்
தீவினை இருட்டைப் போக்கி ஜெகமெலாம் விளங்கும் ஞான
தீபமே! ராமகிருஷ்ண தேவனே! போற்றி போற்றி!

நாமக்கல் கவிஞர்

## சில சொற்களின் தோற்றம்

பேராசிரியர் தி. அ. சொக்கலிங்கம்,

ஒவ்வொரு மொழியிலும் புதிய சொற்களும் தொடர்களும் பல்கிப் பெருகும் போது அம்மொழிகள் வளர்கின்றன. இல்லையாயின், மொழிகள் நிலைத்து நின்று, பயன் குன்றி, இயக்கம் இன்றி மாய்ந்து போகும் இக் கருத்து எல்லா மொழிகளுக்கும் ஒக்கும், போலீசாரைக் குறிக்கும் Cop எனும் ஆங்கிலச் சொல் பரவலாகப் புழக்கத்தில் உள்ளது. இது ஒரு அமெரிக்கச் சொல். பணியிலிருக்கும் காவலரைக் குறிக்கும் ஒரு (Constable on patrol) சொற்றொடரின் சுருக்கமாக அமைந்து பின்னர் அதுவே ஒரு சொல்லாக மாறி இன்று நடைமுறையில் உள்ளது. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இப்படிச் சிதைந்தும், உருமாறியும் வந்திருக்கிற சில சொற்களைப் பற்றி இச்சிறு கட்டுரை விளக்கம் கொடுக்கிறது.

— ஆசிரியர்:

அழகு தமிழில் எத்தனையோ 'பேச்சு மொழி'கள் கலந்திருக்கின்றன. தமிழ் நாட்டைச் சுற்றி வந்தால் இப்படிப் பல சொற்களைச் சேகரித்து விடலாம். சில சொற்கள் எப்படிப் பிறந்தன என்று கொஞ்சம் ஆராய்ந்தால்—அது ஒரு கதையையே சொல்லும். உதாரணத்திற்குச் சில...பாருங்கள் :

வாழையில் பலவகை உண்டு. மலைவாழை, செவ்வாழை, பொந்தன் வாழை, கதலிவாழை, ஏத்தன் (நேந்திரன்) வாழை, பூவன் வாழை—இப்படிப் பல இவை போக மட்டி வாழை என்று ஒருவகை உண்டு, நாஞ்சில் நாட்டிற்கே உரிய சிறப்பான வாழை இது. இதன் பழத்தை 'மட்டிப் பழம்' என்று அழைப்பர். உண்பதற்கு இது சுவையாகவும் இனிமையாகவும் இருக்கும். பச்சைக் குழந்தை முதல் முதியோர்வரை எக்காலத்திலும் இதை உண்ணலாம்; உடல் நலம் இல்லாதவரும் இப்பழத்தை உண்ணலாம். இதுவே உணவாகவும், மருந்தாகவும் பயன்படும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இந்தப் பழத்தின் சிறப்பைப் பற்றிச் சொல்வார்! இவ்வளவு பயன் மிகுந்த சுவையான பழத்தை 'மட்டிப் பழம்' என

ஏன் அழைக்கின்றனர்? கொச்சையாகப் பார்த்தால் 'மட்டி' என்றால் 'முட்டாள்' என்றல்லவா பொருள்? இலக்கியத்தில் 'மட்டு' என்றால் தேனைக் குறிக்கும்! 'மட்டுவார் குழலி' என்றால் தேன் சொட்டும் நீண்ட கூந்தலை உடையவள் என்பது ஆகும். ஆக, தேனைப் போன்ற பயனும், இனிமையும் தருகிற இந்தப் பழத்தை 'மட்டுப் பழம்' என்று அழைக்க, அதுவே காலப் போக்கில் 'மட்டிப் பழம்' ஆயிற்று!

ஒரு மன்னன் தன் தொப்பியில் வைரத்தை ஒளித்து வைத்திருப்பதை அறிந்த மற்றொரு மன்னன், அவனுடன் நட்பு கொண்டு நட்புக்கு அடையாளமாக, இருவரும் தொப்பியை மாற்றிக் கொண்டு அதன் மூலம் வைரத்தையும் அபகரித்தான் என்பது கதை. இதிலிருந்து ஏமாற்றுபவனை 'கேப் (CAP) மாறி' என அழைத்தனர். ஒருவனின் பண முடிச்சை அவனுக்குத் தெரியாமல் தன்னிடம் மாற்றிக் கொண்டு விடுவது முடிச்சுமாறித்தனம்!

தமிழில் எத்தனையோ மாறிகள்; 'சோமாறி', 'கேப் மாறி', 'முடிச்சு மாறி', 'மொள்ளை மாறி'—இப்படிப் பல. இந்த 'மாறி' பிறந்த கதைதான் என்ன?

சட்டைப் பையை 'ஜேபி' என்றும், 'சேப்பு' என்றும் 'பாக்கெட்' என்றும் சொல்வது வழக்கம். இதிலுள்ள பொருளை நமக்குத் தெரியாமல் திருடுவதே 'பிக் பாக்கெட்'; இது ஆங்கில வார்த்தை. ஒருவர் ஜேப்பிலிருந்து மற்றவர் ஜேப்பிற்கு மாறுவதால் அது 'ஜேப்மாறி'யாக ஆயிற்று. பிறகு 'சேப்பு மாறி'யாக மாறி, பிறகு சோப்மாறியாகிக், கடைசியில் 'சோமாறி'யாக உலா வருகின்றது!

மென்மையான உணர்வுகளுக்கு மலரை உருவகமாகச் சொல்லுவார்கள். மலர்களுள் மென்மையானது 'முல்லை'. கற்புக்கும் ஒழுக்கத்துக்கும் இம்மலரை உருவகமாகச் சொல்லுவார்கள்.

ஒழுக்கமோ, கற்போ இழந்தவனை 'முல்லை மாறியவன்' என்று சொல்ல ஆரம்பித்து, இதுவே 'மொள்ளை மாறி' என்று ஆகிவிட்டது!

---

நன்றி : ஜூனியர் விகடன்

# டில்லிப் பயணம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பழனி. அரங்கசாமி

மிக நீண்ட புகைவண்டித் தொடர். நூற்றுக்கணக்கானவர்கள் இறங்குகின்றனர்.

தோளில் ஒரு பையும், கையில் ஒரு பெட்டியுமாக தீர்த்த யாத்திரை போகின்றவனைப் போல நானும் இறங்கி வேகமாக நடந்தேன். டில்லியின் பனிமூட்டம் கலையவில்லை. உடன் வந்த மதுரை நண்பர்கள் வழியிலே ஆக்ராவைக் காண்பதற்கு இறங்கி விட்டார்கள். வெளியில் ரயில் நிலையத்துக்குச் சற்று எதிர்புறம் ஒன்றன் பின் ஒன்றாகப் பேருந்துகள் நகர்ந்து கொண்டிருக்கின்றன. இந்திய தொழில் நுட்பக் கழகம் (I.I.T.) செல்லும் பேருந்தை ஒரு வழியாகக் கண்டு இடம் பிடித்தேன். பம்பாய், கான்பூர், சென்னை ஆகிய இடங்களில் இருப்பதோடு டில்லியில் இருக்கும் தொழில் நுட்பக் கழகத்தையும் சேர்த்து இந்தியாவில் மொத்தம் ஐந்து நிலையங்கள் உள்ளன. இங்குப் படிக்கின்ற மாணவர்களைத் திறமையின் அடிப்படையில் தேர்வு செய்கின்றனர். ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் தொழில் நுட்பக் கல்வி நுணுக்கமும் உதவியும் இவற்றுக்குக் கிடைக்கின்றன. இங்குள்ள மாணவர் விடுதிகளில் தான் ஆங்கில மாநாட்டுக்கு வந்தவர்களுக்குத் தங்கும் வசதிகள் செய்து தரப்பட்டன.

மாநாடு தொடங்குவதற்கு இரண்டு நாள் முன்னதாகவே நான் சென்று விட்டதால், அங்குள்ள விருந்தினர் விடுதியில் தங்கிக் கொண்டேன். அமைதியான இடம்; அழகான புல்வெளியைமையமாக வைத்து வட்டவடிவமாக அமைக்கப் பெற்றிருந்த இந்த விருந்தினர் விடுதியில் சிற்சில வெளிநாட்டுக்காரர்களும் இருந்தனர். அன்று தான் நிறைவுற்ற சூரிய ஒளி (Solar energy) பற்றிய மாநாடு ஒன்றின் பிரதிநிதிகள் பலரைப் பார்த்துப் பேசும் வாய்ப்பும் கிடைத்தது. எரிபொருள் (Energy) உலகமெங்கும் குறைந்து கொண்டு வருகிறது. இன்னும் 50 ஆண்டுகளில் அரபிய நாட்டு எண்ணை வளம் குன்றி விடும் என்று கணிக்கப்படுகிறது. பெட்ரோல், டீசல், மண்ணெண்ணை உற்பத்தி அருகி விட்டால், உலகமெங்கும் பல்கிப் பெருகியுள்ள தொழில் வளம் என்ன ஆவது? இந்நிலையில் தான், வெப்ப நாடுகளில் கிடைக்கும் சூரிய ஒளியை எப்படிப் பயன்படுத்திக்

கொள்வது என்ற ஆய்வில் இன்றைய உலகம் இறங்கியுள்ளது. காலப் போக்கில் அளவற்ற சூரிய ஒளியையும் மனித இனம் தனக்கேற்றவாறு பயன்படுத்திக் கொள்ளும் என்றே நம்பலாம்.

டிசம்பர் 21 - ஆம் நாள் காலை. விருந்தினர் இல்ல உணவு விடுதியில் சிற்றுண்டி அருந்தித் கொண்டிருந்தேன். அருகில் இருந்த ஒருவர் மிக விரைவாக ரொட்டித் துண்டினையும், முட்டையினையும் விழுங்கிக் கொண்டிருந்தார். மஞ்சள் நிறமும், சப்பைமூக்கும் குட்டையான உருவமும் அவர் ஜப்பானைச் சேர்ந்தவர் எனபதைத் தெளிவாக்கி விட்டன. இலேசாக என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன்.

''கப்பல் கட்டும் தொழில், மின்சாதன உற்பத்தி ஆகியவற்றில் உலக நாடுகளிலேயே ஜப்பான் முன்னணியில் நிற்பதற்குப் பாராட்டுகள்'' என்றேன்.

என்னை நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்தார். தங்கப்பற்கள் பளிச்சிட்டன.

''யுத்தக் கருவிகளே செய்யக் கூடாது என்று ஜப்பானிய அரசியல் சட்டமே தடை விதிக்கிறதாமே!''

''ஆம்! அணுயுகத்திலும் நாங்கள்அமைதியை விரும்புகிறோம்''
—இது அவர் பதில்.

''உங்கள் நாட்டுத் தொழில் வளத்திற்குத் தொழிலாளர்களின் பங்கு எத்தகையது?''

''ஜப்பானியத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லை. ஏதேனும் கோரிக்கை இருந்து அதனை வற்புறுத்த எண்ணினால், தினமும் குறிப்பிட்ட நேரத்துக்கு மேல் இரண்டு மணி நேரம் அதிகப்படியாகவேலைசெய்வார்கள். ஆலைகள், தொழிலகங்கள் ஆகியவற்றில் விடுமுறை நாட்களில் பணி செய்ய வருவோம் என்பார்கள்.''

நம் நாட்டுத் தொழிலாளர்களையும், அவர்களை நடத்திச் செல்லும் தொழிற்சங்கத் தலைவர்களையும் ஒரு கணம் இவர்களோடு ஒப்பிட்டுப் பெருமூச்சு விட்டேன்.

மதிய உணவுக்குப் பின் டில்லி ரயில் நிலையம் வந்தேன். ஊர் திரும்புவதற்குப் பயணச்சீட்டு வேண்டுமே! மதுரையிலிருந்து கொடுக்கப்பட்ட தந்திகளுக்குப் பதிலே இல்லை. இந்திய நாடு முழுதும் செல்லுதற்குரிய துரித ரயில் வண்டித் தொடர்கள் டில்லியிருந்து புறப்படுகின்றன. நாட்டின் தலைநகரமாக இருப்பதால், பயணச்சீட்டு வாங்குமிடத்தில் கியூ வரிசையில் எப்போதும் கூட்டம். எனக்காகக் கொடுக்கப்பட்ட தந்தி எண்ணையும். மதுரைச் சந்திப்பில் கொடுத்த ஒரு குறிப்பையும் காட்டி சென்னைக்குத் திருபபுதற்கு பயணச் சீட்டு கொடுக்க முடியுமா என்று கேட்க வேண்டும். வரிசையில் நின்றால் இரண்டு மணி நேரமாவது ஆகும். எனவே அலுவலகத்துக்கு உள்ளயே புகுந்து விட்டேன். ஒரு சீக்கிய இளம் பெண் என்னை முறைத்துப் பார்த்தாள். மெதுவாக முதலில் எனது நிலைமையை ஆங்கிலத்தில் சொன்னேன். அவள் இந்தியில் உரத்த குரலில் பதில் சொன்னாள். பொறுமை இழந்தேன். தந்திக்குப் பதிலும் இல்லாமல் பயணச்சீட்டும் கொடுக்காமல் இருப்பது ரயில்வே செய்த தவறு. உரிய பதில் இல்லாமல் நான் வெளியில் போகமாட்டேன் என்று நானும் சத்தம் போட்டேன் திடீரென்று இருக்கையை விட்டிறங்கித் தலைமைப் பயண ஆய்வாளரிடம் ஓடினாள். அவர் வந்து குறுக்கிட்டு, எதையோ பார்த்துவிட்டு பயணம் முன்பதிவு செய்யப்படவில்லை என்று கையை விரித்து விட்டார். வேறு ஒரு செல்வாக்குள்ள நண்பர் மறுநாள் எனக்குப் பயணச்சீட்டு வாங்கிக் கொடுத்தார்.

தமிழகத்திலிருந்து டில்லி செல்வோருக்கு ஏற்படும் பற்பல சிக்கல்களில் மொழிப்பிரச்சனையும் ஒன்று. நன்றாகப் படித்து அலுவலகங்களில் பணி செய்வோரும் நாம் ஆங்கிலத்தில் கேட்பவற்றைப் புரிந்து கொள்ளுகின்றனர்; ஆனால் ஆங்கிலத்தில் திரும்பவும் பதில் சொல்ல அவர்களால் முடியவில்லை. இது ஒரு ரகம். ஆங்கிலம் தெரிகிறதோ இல்லையோ, சரளமாக இந்தியில் பதில் சொல்லி விடுவது. இப்படிச் சில பேர். ஆங்கிலத்தில் பேசத் தொடங்கியதும், தலையை ஆட்டி விட்டு நகர்ந்து விடுவோரும் உண்டு. இப்படிப்பட்டவர்கள் யாரிடம் எதனைக் கேட்டாலும் முடிவு ஒன்றுதான். கேட்கின்ற கேள்விக்கு விடையும் விளக்கமும் கிடைக்காது. நமக்கும் தெற்கே - நாட்டின் கடைக் கோடியில் இருக்கும் கேரளத்துக்காரர்களும், ஆந்திர, ஒரிய, கன்னடத்து மக்களும் அன்றாடப் புழக்கத்துக்கு வேண்டிய இந்தியைப் பேசி விடுகிறார்கள். தமிழன் மட்டும் தான் திண்டாட வேண்டியுள்ளது. தமிழகத்து இளைஞர்கள் நேர்முகத் தேர்வுகளுக்குப் போகும்போதும் இந்த நிலைதான்.

நடைமுறை வாழ்க்கையில் இந்தி மொழியின் அவசியத்தைக் கரோல் பாக் கடைத்தெருவில் காணமுடிந்தது நானும் டாக்டர் சிவ சங்கரனும் சிற்சில பொருட்களை வாங்கும்போது இந்தி மொழி பேசு-வோரின் உதவியை நாடவேண்டியிருந்தது. மிக நீண்ட அஜ்மல்கான் ரோட்டின் இருபுறமும் துணிக்கடைகள், கர்பளி உடைகள், தோல் பொருட்கள், பல்வேறு விதமான கைப்பைகள், பேனா, பென்சில், கைக் கடிகாரம், வாசனைப் பொருள்கள், வால்நட், முந்திரி போன்ற உலர்ந்த பழங்கள் ஆகியவற்றை வரிசை வரிசையாகக் கொட்டி வைத்திருக்கிறார்கள். ஆங்காங்கே மீன், கறி இவற்றின் துண்டங்-களைக் கண்ணாடிப் பெட்டிகளில் வைத்துள்ளனர். எதிரில் நின்று கை அசைத்தால் போதும். நமக்கு முன்னாலேயே அவற்றை அள-வோடு வெட்டி மசாலா போட்டு வறுத்துக் கொடுக்கின்றனர்' விற்-பனைக்குக் கிடைக்கும் பொருட்களில் எதைத்தான் வாங்குவது? அலுமினியத்தாலும், எஃகினாலும் செய்யப்பட்ட நாற்காலிகளும், கட்டில்களும் விலை மலிவு. சென்னையில் நூற்றி ஐம்பது ரூபாய்க்கு விற்கின்ற அலுமினிய நாற்காலி அங்கு எண்பதுக்கே கிடைக்கிறது. கட்டிலின் விலை வெறும் எழுபது ரூபாய். பெரும்பாலும் பஞ்சாப்-காரர்களே இந்தக் கடைகளை நடத்துகின்றனர். கம்பளிச் சட்டை-களும், நைலான் துணிகளும் மலிவு தான். சிற்சில பொருட்களை வாங்கிக் கொண்டு ராமகிருஷ்ணாபுரத்துக்கு வரவேண்டும். கடைத் தெருவின் கடைசிக்கு வந்து பேருந்து எண்ணைக் கேட்டுக்கொண்டு நின்றோம். எங்கள் எதிரில் சுற்றுப்பயண அலுவலகம் ஒன்றிருந்தது.

ஆக்ரா, மதுரா, பக்ரா நங்கல், பதன்கோட் போன்ற இடங்-களுக்கு சொகுசுப் பேருந்துகளில் சுற்றுப் பயணிகளை அழைத்துச் செல்வதே இவர்களின் தொழில். அலுவலக அமைப்பும், தோரணை-யும், பயணச் சீட்டு விற்கின்ற சுறுசுறுப்பும் அத்தொழிலில் நிறைந்த வருவாய் கிடைப்பதாகவே தெரிந்தது. அதன் உரிமையாளர் ஒரு கேரளத்துப் பணிக்கர். முறுக்கிவிட்ட மீசை. நாங்கள் உள்ளே நுழைந்ததும் தமிழில் வரவேற்றார்.

''அப்பாடா! பல நாட்களுக்குப்பிறகு தமிழில் வரவேற்பு.''

''தமிழாளுக்கு இந்தி தெரியாது என்று எனக்குத் தெரியும். மற்று நிங்கள் இங்கிலீஷ் இவட எடுபடாது.''—இது பணிக்கர்

''என்ன செய்வது! நாங்கள் இந்தி பயிலவில்லை. படிக்கவும் வசதியில்லை......'' என்று வார்த்தையை முடிக்காமல் இழுத்தேன்.

''ஆனால் ஒண்ணு, இந்தி படிச்சு டெல்லி வந்தால் மதராஸி-களை ஜெயிக்க..... முடியாது.'' பணிக்கருக்குத் தெரிந்த நடைமுறை உலகம் நமக்குத் தெரியவில்லையா? எனது சிந்தனை இந்தி மொழி-யினைப் பற்றி நின்றது. காலஞ்சென்ற தந்தை பெரியாரே 1936-ஆம் ஆண்டில் ஈரோடு மாநகரில் இந்தி படிப்பதற்கு வேண்டும் வசதிகளைச் செய்து கொடுத்தார். கட்டாய இந்தி என்று வந்த போதுதான் எதிர்த்தார். அன்று தொட்டு இன்றுவரை ஐம்பதாண்டு கால அரசியலில் எவ்வளவோ மாற்றங்கள். திராவிடநாடு என்ற மயக்கத்தில் இந்தி எதிர்ப்புக் கொள்கைக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது, அதனை முன்னிலைப் படுத்தியே மாநில ஆட்சியைக்கூட ஒரு அரசியல் கட்சியால் பிடிக்க முடிந்தது. தற்போது அப்படி-யில்லை. மும்மொழிக் கொள்கையின் படி பிற வடமாநிலங்கள் ஆங்கிலம் பயிலவில்லையே என்பது ஒரு கேள்வி. தமிழகத்து மாணவன் இந்தியோடு ஆங்கிலமும் கற்றுக் கொண்டால், வெளி நாட்டுத் தொடர்புக்கு வழிவகை ஏற்படட்டுமே! நமக்கு நல்லது தானே!

நானும் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக பிரச்சனையைக் கவனித்து வருகிறேன். இருமொழிக் கொள்கையா, மும்மொழிக் கொள்கையா என்ற வினாவிற்கு மக்களே விடை அளித்துக் கொள்ள வேண்டிய தருணம் வந்து விட்டது. கட்டாயமாக எல்லா மட்டங்-களிலும் இந்தியைப் புகுத்தியபோது எதிர்த்தது சரி. இன்றைய நிலைமை வேறு. பல்லாயிரக்கணக்கான தமிழகத்து இளைஞர்களின் எதிர் காலத்தை மனத்தில் எண்ணிஇருமொழிக் கொள்கைதான் என்ற கோட்பாட்டை அரசினரும் மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

மறைமலையடிகளார் தனித்தமிழ் இயக்கம் நடத்தியவர் வடநூற் களையைத்தமிழ்க் கழனியிலிருந்து அறவே நீக்குவேன் என்று உறுதி கொண்டு இலக்கியப் பணி செய்தவர் வேதாசலம் என்ற தமது பெயரை மறைமலை என்று மாற்றிக் கொண்டவர். அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. ''வடமொழி பயின்றால் தமிழ் மாண்டா போகும்?'' என்று கேட்டார். திரு, வி. கவின் சமரச போக்கு நமது மொழிப்பிரச்சனையில் நாம் மனத்திற் கொள்ள வேண்டிய ஒன்றாகும். அன்னைத் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுப்பதோடு இயன்ற அளவு பிறமொழிகளையும் கற்பது நல்லது

டிசர்பர் 22. தொழில் நுட்ப கழகத்தின் மைய அரங்கில் அனைத்திந்திய ஆங்கில மாநாடு தொடங்கியது. அரை வட்ட வடிவமாக உள்ள அந்த மிகப்பெரிய அரங்கு மாநாடுகள் நடத்துவதற்கென்றே அமைக்கப்பட்டதாகும். எதிரொலியின்றி சொற்பொழிவுகளைத் தெளிவாகக் கேட்கவும், அரங்கின் எந்த இடத்திலிருந்தும் மேடையில் இருப்போரைத் தெளிவாகக் காணவும் முடிந்தது. விழாச் சொற்பொழிவினை ஆற்றியவர் காஷ்மீர் அரசர் கரன்சிங். ''அமைச்சரே! மாதம் மும்மாரி பெய்கிறதா'' என்று கேட்கும் பொம்மை அரசர் அல்லர் இவர். ஆங்கிலம், பிரெஞ்சு, வடமொழி, டோக்ரி, இந்தி ஆகிய பல மொழிகள் அறிந்தவர். மத்திய அரசில் அமைச்சராக இருந்தபோது ஊதியமும் வாங்கவில்லை; அரசினர் கொடுத்த மாளிகையிலும் தங்கவில்லை; காஷ்மீர் அரசரானாலும், சாதாரணமாக யாரிடமும் பழகும் இனிய பண்பு அமையப்பெற்ற அறிஞர்.

சரளமாகப் பேசிய ஆங்கிலச் சொற்பொழிவில் ஐரிஷ் நாட்டுக் கவிஞரான ஏட்ஸ் எழுதிய கவிதையின் ஒரு பகுதியைச் சொல்லோசை நயம்படப் பொருள் உணர்ந்து பாடிக் காட்டினார். கூடியிருந்த அறிஞர் கூட்டம் வியப்பிலும் மகிழ்ச்சியிலும் கையொலி எழுப்பிய போது மண்டபமே அதிர்ந்தது. மாநாட்டு முதனாள் நிகழ்ச்சியிலேயே இவர் தன்னைப்பற்றி எழுதிய வாழ்க்கை வரலாறு நூல் வெளியிடப்பட்டது.

முற்பகல் நிகழ்ச்சியின் இடையில் புல்வெளியில் தேநீரும், இனிப்பும் கொடுக்கப்பட்டன. பலபேருடைய வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டு கூட்டத்திலேயே தானும் தேநீர்க் கோப்பையை எடுத்துக் கொண்டு வந்தார் கரன்சிங்.

'அண்மைக் காலத்திய அரசியல் நிகழ்ச்சிகளும் அந்த நூலில் இடம் பெற்றுள்ளனவா' என்று கேட்டேன்.

'ஓ! இல்லை! எனது 26-வயது வரையில் உள்ள நிகழ்ச்சிகள் தான்'' என்றார்.

'இன்னும் ஓர் நூல் தொடர்ந்து வரப்போகிறதோ' என்றேன்.

'ஒன்று இல்லை. இன்னும் இரண்டு பகுதிகள்'—என்று பதிலிறுத்தார்.

ஆங்கில மாநாட்டு நிகழ்ச்சிகளில் குறிப்பிடத்தக்க ஓரிரு கருத்துக்கள் சிந்திக்கத் தகுந்தவை. நம்நாட்டில் ஆங்கில இலக்கியம் பயிலும் மாணவரிடை இந்தியர்களே எழுதிய ஆங்கில இலக்கியம் (Indo - Anglian literature) நிறையப் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பது அவற்றுள் ஒன்று. ஆங்கிலத்தை அன்னிய மொழியாகக் கருதாமல் உலகத்தையே இணைக்கும் வன்மை வாய்ந்த ஒரு உலக மொழியாகக் கருதி அதற்குரிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்பது மற்றொன்று. நாடு முழுவதிலிருந்தும் ஆங்கில ஆசிரியர்களாக ஒன்று கூடி ஊதிய உயர்வுக்கோ, தொழில் பற்றிய முறையீட்டுக்கோ தீர்மானம் போட்டு வழிமொழிந்து விவாதம் நடத்தும் சராசரி மாநாடாக இல்லாமல், ஆக்க பூர்வமாகவும். அறிவு நுணுக்கமாகவும் கூடிச் சிந்தித்துச் செயலாற்றுதற்குரிய வழி வகை கூறும் ஒரு கண்ணியம் மிக்க, கருத்துச் செறிவு நிறைந்த மாநாடாக நடந்தது. மாநாட்டையொட்டி ஒரு புத்தகக் கண்காட்சி-யும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

காட்சிக்கும் கருத்துக்கும் நல்ல விருந்து; ஆனால் வயிற்றுக்-குத்தான் விருந்து இல்லை. மாநாடு நடந்த மூன்று நாட்களிலும் மதிய உணவு வெந்த அரிசியும் குழைந்த பருப்புமே. மேலும் உருளைக்கிழங்கு வறுவல். இதை விட்டால், தந்தூரி ரொட்டியும், காரக்குழம்பும். காலையில் மட்டும் என்ன? அவித்த முட்டையும் இரண்டு ரொட்டித் துண்டும் தான். இது வேண்டாம் என்றால் பூரியும் உருளைக்கிழங்கும். இரவு உணவிலும் இந்த உருளைக்-கிழங்கு தான். நமது ஊரில் கிலோ இரண்டு ரூபாய்க்கு விற்கும் அந்தக் கிழங்கு அங்கு அறுபது பைசா தான். மூன்று வேளை உணவிலும் வெவ்வேறு உருவிலே வந்த ஒரே பொருள் உருளைக்-கிழங்கு தான். இவை எல்லாவற்றிலும் நான் விரும்பியது அன்றாடம் காலையில் கிடைத்த சூடான தேநீர். வெளியில் தலைகாட்ட முடியாத அந்தக் குளிரில் போர்வைக்குள் ஒளிந்து கொண்டே கொதிக்கும் தேநீரைச் சப்புக் கொட்டி ஊதி ஊதி ரசித்துக் குடித்தேன்.

கருத்தைவிட்டு அகலாத இன்னொரு நிகழ்ச்சியும் உண்டு. தானே இயற்றிய அழகான ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றை திரு. ஜக்மோகன் அரங்கத்தில் படித்துக் காட்டினார் இவர் டில்லி மாநகரின் மாநில ஆளுநர் (Lieutenant Governor). இந்திராவின் தவப்புதல்வனாக இருந்து இந்தியத் தலைநகரை ஓரிரு ஆண்டுகள்

ஆட்டிப்படைத்த சஞ்சய்காந்தியின் மிக நெருங்கிய நண்பர். குடும்பக்-கட்டுப்பாட்டை ஜாதிமத வேறுபாடின்றி நடைமுறைப் படுத்து-வதிலும், டில்லியின் பல்வேறு பகுதிகளை ஒழுங்குபடுத்துவதிலும் சஞ்சய் காந்தியோடு ஒத்துழைத்தவர். இதனாலேயே இவருக்குக் கெட்டபெயர். தமிழகத்தில் ஒருசில நாள், வார இதழ்களில் இவரைப் போக்கிரி, கல்நெஞ்சன், முரடன் என்றெல்லாம் பட்டம் சூட்டியிருந்தார்கள். கவிதை இயற்றும் ஒரு பண்பட்ட உள்ளம் முரட்டுத் தன்மையதாக இருக்குமா? கவிதை படித்து விட்டுச் சென்ற ஜக்மோகனைப் பற்றிச் சிறிது எண்ணிப் பார்த்தேன். பத்திரிகை-களில் அவரைப்பற்றிப் பற்றிப் படித்த செய்திகளே மேலோங்கி நின்றன. மறுநாள் அவரைக் கண்டு பேசும் வாய்ப்புக் கிட்டும் என்று கனவிலும் நான் எண்ணிப்பார்க்கவில்லை.

மாநாட்டின் நிறைவு நாளன்று அவருடைய மாளிகையில் ஒரு விருந்து. மாநாட்டுப் பிரதிநிதிகளை பேருந்துகளில் அழைத்துச் சென்றார்கள். கோடிக்கணக்கில் செலவு செய்து கட்டிய ஆசிய விளையாட்டரங்கம், ஆசியக் கிராமம் ஆகியவற்றைப் பார்த்தோம். கூட்ட நெரிசலைத் தவிர்த்துப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்-கென்று பல்வேறிடங்களில் கட்டப்பட்ட மேம்பாலங்களை (fly-over)க் கடந்து சென்றோம். டில்லி மாநகர வளர்ச்சிக் கழகம் (Delhi Development Authority) இந்த ஏற்பாடுகளைச் செய்தது என்றா-லும், இந்திய அரசின் ஆணைப்படிதான் இவை யாவும் நடந்தன. பற்றாக்குறை மிகுந்த சாதாரண நாடாகிய இந்தியா இந்த ஆடம்-பரச் செலவுகளைச் செய்யக் கூடாது என்றெல்லாம் லோகதளம், ஜனதா போன்ற கட்சிகள் எதிர்ப்புக் குரல் எழுப்பின. அதனை அரசினர் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை.

புதிய மேம்பாலங்கள், பழைய கடைத்தெருக்கள், ஒழுங்காக நிரவி விடப்பட்ட அழகிய புல்தரைகள், பூங்காக்கள், அலுவலகங்கள், வரிசை வரிசையாகச் செல்லும் கார்கள்—இவற்றையெல்லாம் கடந்து எங்கள் பேருந்து போய்க் கொண்டே இருந்தது. செங்கோட்டை-யின் பின் பகுதி, சாந்தி வனம், ராஜ்காட் இவற்றைக் கடந்து டில்லி பல்கலைக் கழகம் செல்லும் சாலையில் திரும்பி ஒரு பெரிய மாளிகையின் முன் நின்றது. வாயிற் காவலர்கள் விறைப்பாக நின்று சல்யூட் அடித்தனர். பங்களாவின் முன்னர் இருந்த பசிய புல் தரை-யின் ஒருபுறம், சீருடை அணிந்த பாண்டு வாத்தியக்காரர்கள்.

இன்னிசை முழங்கினர். புல்வெளியின் மத்தியில் நின்று அனைவர் பார்வையிலும் படும்படியாக டில்லி லெப்டினென்ட் கவர்னர் ஜக்மோகனும் அவரது துணைவியார் சரளாவும் கைகூப்பி வணக்கம் தெரிவித்தனர்.

கேக்குகள், பல்வேறு வித இனிப்புகள், ஐஸ்கிரீம், பழம் போன்றவற்றை ஆங்காங்கே போடப்பட்டிருந்த மேஜைகளிலிருந்து எடுத்துத் தட்டில் வைத்துக் கொண்டே (Buffet Party) சுவைத்துச் சாப்பிட்டோம். ஜக்மோகனைச் சுற்றிக் கூட்டம். தென்னகத்துப் பத்திரிகைகள் குறிப்பிட்டதற்கும், எனது கருத்தில் இருந்ததற்கும் மாறானவராகத் தெரிகிறாரே! எப்படியும் பேசிவிட வேண்டுமே என்ற ஆர்வத்துடன் இருந்தேன் சரளா அம்மையாரிடம் நெருங்கிச் சென்று அவரது கணவரைப் பற்றி நான் எண்ணியிருந்ததைச் சொன்னேன். 'வாருங்கள்' என்று அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார்.

''ஒன்று மட்டும் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். துர்க்மன்கேட் பகுதியில் குடிசைகளை அப்புறப்படுத்துவதில் அவ்வளவு கடுமையைக் காட்டியிருக்க வேண்டியதில்லை. மிகச்சிறந்த கொள்கையினையும் செயற்படுத்தும் போது கொஞ்சம் அன்பும், அமைதியும் காட்டியிருக்கலாமே'' என்று நான் தொடர்ந்தேன். புல் தரையில் நடந்து கொண்டே வந்தவர், திடீரென நின்று ''நாங்கள் முன்னேறிவிப்போடும், அமைதியோடும் தான் இந்தக் காரியத்தைத் தொடங்கினோம். எதிர்த் தரப்பில் பிடிவாதமும் வம்பும் செய்தபோது திட்டப்படி காரியங்களை முடிக்க வேண்டியதாயிற்று. நாங்கள் கடுமையாகச் செயற்படவில்லை. ஆனால் கெடுபிடி செய்ததாகப் பத்திரிகையில் தவறான பிரச்சாரம் செய்து விட்டார்கள்'' என்றார்.

ஐம்பது வயதிற்கு மேல் ஆகியும் இளமையாகவே காணப்படும் கவர்னர் ஜக்மோகன ஒரு பத்திரிகையாளர்; புகைப்பட நிபுணர்; கவிஞர். ஆனந்த குமாரசாமியின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். ஜனதா ஆட்சி வருவதற்கு முன்னர் தன்னைப் பற்றிய அவதூறுகளுக்குப் பதில் சொல்லும் முறையில் அவர் எழுதிய ஆங்கில நூல் (Island of Truth) ஒன்று டில்லியில் வெளியாகி உள்ளது ஒரு மணி நேரத்திற்கு மேல் அளவளாவி விருந்து உண்ட நிகழ்ச்சி முடிந்து எங்கள் பேருந்து டில்லிப் பல்கலைக் கழகம் வழியாக நகரின் மையப் பகுதியான கன்னாட் பிளேஸ் வந்து

ரீடிங் சாலையில் உள்ள பிர்லா மந்திர் எனப்படும் லக்ஷ்மீ நாராயணரின் கோவிலுக்கு எதிரில் நின்றது.

"உலகப்பணக்காரரான ஜி.டி பிர்லாவின் முந்தையோர் கட்டிய இச்சலவைக்கல் ஆலயம் தூய்மையாகக் காணப்படுகிறது. நூலகமும், ஒரு தோட்டமும் கோவிலுக்குள்ளேயே உள்ளன. பளிங்குச் சிலையாகக் காட்சி தரும் லட்சுமியும், நாராயணரும் நம் உள்ளத்தே குடி கொள்ளுகின்றனர்''

மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத், தூது
நடந்தானை ஏத்தாத நாவென் நாவே!
நாராய ணாவென்னா நாவென் நாவே!

என்று வாயார வாழ்த்தி உளமார வணங்கினேன்.

டெல்லி மாநகரின் வெளிப்புறத்தே 12-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டு அமைந்திருக்கும் குதுப்மினார் உயரிய நினைவுச் சின்னம். பேருந்து அதனை நோக்கிச் சென்றது. மினார் என்றால் கோபுரம். குத்புதீன் எனும் அடிமை வமிசத்து அரசன் கட்டியதால் இதற்கு இப்பெயர் வந்தது. இதில் உள்ள அகலமான படிகள் மேலே போகப் போக குறுகி இருக்கும். இதில் நடந்து மினாரின் உச்சிக்குச் சென்று மண்ணகத்து டில்லியை விண்ணகத்திலேயிருந்து பார்த்து வியந்து மகிழலாம். ஆனால் இந்த ஆசைக்கு இப்போது முற்றுப் புள்ளி வைத்து விட்டார்கள். சில மாதங்களுக்கு முன்னர் மேலே குறுகலான படிகளில், இருளடர்ந்த பகுதியில் பெண்களிடம் வம்பு செய்த சில காலிகளின் அட்டகாசத்தால் சிலர் கீழே விழ, மிகவும் நெரிசல் ஏற்பட்டுப் படிகளில் வரிசையாக அனைவரும விழுந்து குழந்தைகளும், பெண்களும் ஏராளமானவர்கள் இறந்து விட்டார்கள். மினாரின் நுழைவு வாயில் இப்போது பூட்டப்பட்டுக் கிடக்கிறது. அங்குப்போகிற சுற்றுப் பயணிகள் விண்ணை முட்டி நிற்கும் மினாரைப் பார்த்தும் மேலே ஏறிப் பார்க்கவில்லையே என்று பெருமூச்சு விட்டுத் திரும்புகிறார்கள். நானும் பெருமூச்சு விட்டேன். ஆனால் அதற்குரிய காரணம் வேறு. அங்குப் போடப்பட்டுள்ள கல்தளம், சுற்றுச் சுவர், மேடை, கோட்டை போன்ற அமைப்பு தூண்கள் ஆகிய இவை யாவும் வன்மையான கருங்கற்களால் கட்டப்பட்டுள்ளன. குத்புதீன் காலத்தில் கட்டப்பட்டாலும், தொடர்ந்து திருத்தி

அமைக்கப்பட்டும், புதிதாகச் செப்பனிடப்பட்டும் வந்த அந்தப் பழங்கால வரலாற்றுச் சின்னத்தில் பயன்படுத்தப்பட்ட கருங்கற்கள் யாவும் எங்கிருந்து வந்தன தெரியுமா? அலை அலையாக வந்த முகலாயப் படையெடுப்பில் டில்லியைச் சுற்றிலும் இருந்த 27-க்கு மேற்பட்ட இந்துக் கோயில்களும் அமண் பாழிகளும் அழிக்கப்பட்டு அந்த இடிபாட்டுப் பொருள்களைத்தான் மினார் கட்டப் பயன்படுத்தி உள்ளனர். இந்த விவரங்கள் ஒரு கல்வெட்டில் உள்ளன. ஒன்றை அழித்துப் பிறிதொன்று உருவாக்கப்பட்டுள்ளது. பிறர் மதத்தையும் கொள்கையினையும் மதிக்காத கண்மூடித்தனமான செயலுக்கு இது ஒரு சான்று. கழிவு நீர் விழும் இடத்தில் சுவரில் தலை-கீழாகப் பதிக்கப்பட்டுள்ள வினாயகர் சிலையும் இதனை உறுதிப் படுத்துகிறது.

நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சிகள். வாழ்க்கையின் மேடுபள்ளங்களை, உள்ளக் குமுறலைத் தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவம் நமக்கு இருக்கிறது. குற்றமே செய்யினும் குணமெனக் கருதும் கொள்கை வேண்டும் என்கிறது உள்ளம். கலாச்-சாரத்தின் மீதும், மதங்களின் மீதும் தாக்குதல் ஏற்பட்ட காலத்தில் அன்றைய இந்து சமுதாயம் எத்துணைக் கொடுமைகளை அனுபவித்-ததோ என்று எண்ணினேன். தான் எங்கும் வன்முறைகளைக் கைக் கொள்ளாது. குற்றமிருப்பின் தன்னையே நொந்து கொண்டு, பிற-மதக் காழ்ப்புக்கும், தாக்குதலுக்கும், ஈடு கொடுத்துக் காலங் காலமாக நிலைத்து நிற்கின்றது இந்து மதம். அந்தக் கலாச்சாரப் பின்னணியில் நாமும் இருக்கிறோம் என்ற பெருமையில் பேருந்து நோக்கி நடந்தேன்

எங்கெங்கோ சுற்றிக் கொண்டு வந்தது பேருந்து. இராம கிருஷ்ண புரத்தில் பெருஞ்சாலையினை ஒட்டிய ஒரு உயரமான பாறையில் சில ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட முருகன்கோவிலும் கண்ணில் பட்டது கைகூப்பி வணங்கினேன். கரோல்பாக் பணிக்கர் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமையன்று இலவசமாக அந்தப்பகுதி மக்களைத் தமது பேருந்தில் இந்தக் கோவிலுக்கு அழைத்து வர ஏற்பாடு செய்துள்ளதைச் சொன்னார்கள். பேருந்து சில மணித்-துளிகளில் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தைத் தாண்டி இரவு 10-மணியளவில் மாணவர் விடுதிக்கு வந்தது. ஒரு வாரம் தங்கிய நிறைந்த உள்ளத்தோடு மறுநாள் டில்லி நண்பர்களிடம் விடை-பெற்றுக்கொண்டு மதுரைக்குத் திரும்பினேன்.

—முற்றும்—

நாவலர் பண்டித

# ந. மு. வேங்கடசாமி நாட்டார்

## நூற்றாண்டு விழா

பேரன்புடையீர், வணக்கம்!

தமிழ்நாட்டிலே தமது இனிய குணநலத்தாலும் புலமை வளத்தாலும், தன்னிகரற்றுத் தமிழ்ப் பணியாற்றிய திறத்தாலும் தலைசிறந்து திகழ்ந்தவர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள். 1907-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய பண்டிதம் தேர்வில் முதன்மையாக வந்து பாண்டித் துரைத் தேவர் அவர்களிடம் தங்கத் தோடா பரிசாகப் பெற்றவர். அவரது நூற்றாண்டு விழா 12 - 4 - 1984 அன்று நிகழவுள்ளது.

நூற்றாண்டு விழாவினைப் பெரிய அளவில் சீரிய முறையில் எடுக்கவும் செயற்குழு அமைக்கவும் தஞ்சை கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் ஏப்ரல் திங்களில் ஏற்பாடு செய்யப்படுகிறது.

நூற்றாண்டு விழாவினையொட்டி மலர், வாழ்க்கை வரலாறு நிழற்படம் ஆகியவற்றை வெளியிட உள்ளோம் நாட்டார் அவர்களின் மாணவர்கள், நண்பர்கள், நெருங்கிப் பழகியோர், உறவினர்கள் அனைவரும் தாம் அறியும்செய்திகளை தெரிவித்தருளவேண்டுகிறோம். பிற அன்பர்களையும் ஆற்றுப்படுத்துங்கள். தங்கள் அன்பான ஒத்துழைப்பையும் உறுதுணையையும் நாடுகிறோம்.

தொடர்பு கொள்ள முகவரி:
வே. நடராசன்,
'செந்தில் நிலையம்'
1572, 13வது சாலை,
அண்ணாநகர்,
சென்னை - 600 040

பேராசிரியர்கள்
மது. ச. விமலானந்தம்,
பி. விருத்தாசலம்,

# நூல் மதிப்புரை—ஒரு வேண்டுகோள்

1) 'செந்தமிழ்' வாயிலாக நூல்களை அறிமுகம் செய்ய விரும்புவோரின் படைப்புக்களை வரவேற்கிறோம்.

2) தமிழிலக்கிய நூல்களும், தமிழர் பண்பாடு-நாகரிகம் பற்றிய படைப்புகளும், தொல்பொருள்-தத்துவம், சமயம், கலை, விஞ்ஞானம் பற்றிய அறிவு வளர்ச்சிக்குதவும் நூல்களும் மதிப்புரைக்கு அனுப்பலாம்.

3) தமிழ்மொழி வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிக்கும் பயன்படக்கூடிய ஆங்கில நூல்களும் உடன்பாடே.

4) நூல் அறிமுகம் விரும்புவோர் ஒவ்வொரு நூலின் இரண்டு படிகளை அனுப்புமாறு வேண்டுகிறோம்.

5) வெளியீட்டு நிறுவனத்துக்கோ ஆசிரியருக்கோ மதிப்புரை வெளியான 'செந்தமிழ்' இதழ் அனுப்பப்படும்.

6) துண்டு வெளியீடோ விளம்பர நோக்கம் கொண்டவையோ மதிப்புரையில் இடம்பெறாது.

7) தமிழ் இலக்கியப் பணியே 'செந்தமிழின் குறிக்கோள். வெளியீட்டு நிறுவனங்களும் நூல் ஆசிரியர்களும் மதிப்புரைக்கு நூல்களை அனுப்பக் கோருகிறோம்.

—ஆசிரியர்
செந்தமிழ்
54, தமிழ்ச்சங்கச் சாலை
மதுரை-1

## வரப் பெற்றோம்

திருமலையாற்றுப்படை: சி. நா. கிருஷ்ணமூர்த்தி - ஸ்ரீனிவாசா பதிப்பகம் 7, இராமகிருஷ்ணாபுரம் முதல் தெரு, மேற்கு, மாம்பலம் சென்னை 600033. ரூ 3-00. 56 பக்.

2 *Sri Samkshepa Ramayanam* (இராமாயணச் சுருக்கம்).
ரேவதி கோபாலன் (ஆங்கிலம்)

வால்மீகி புத்தக நிலையம், காசிராமன் தெரு, கும்பகோணம் 612 001. ரூ. 2-00; 44 பக்.

3. *இந்து தமிழ்க் கவிஞர் தலைமை மன்றத்து ஆறாம் ஆண்டு நிறைவு விழாச் சிறப்பு வெளியீடு.*

காஞ்சிக் காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகளைப் போற்றும் பாடல்களுடன் பிற இலக்கியக் கட்டுரைகளும், பாடல்களும் கொண்டுள்ளது.

4. *பாரதியின் நீதிகள்:* எஸ் குலசேகரன். ரூ 4-50. 80 பக்.

5. *தடாதகைப் பிராட்டி:* எஸ்.குலசேகரன். ரூ.7-00. 112 பக்.
அமிழ்தம் பதிப்பகம், நார்த்தாம்பூண்டி,
திருவண்ணாமலை வட்டம் (வ.ஆ) 606809.

6. *அலைகள் ஓய்வதில்லை:* தாமரை செந்தூர் பாண்டி.
ரூ.7-00. 124 பக்.

7. *சிறகு முளைக்காத ஒரு பறவை:* டி.எஸ்.ரவீந்தரதாஸ்,
ரூ. 7-50. 144 பக்.

8. *புள்ளியில் மலர்ந்த பூக்கள்:* என்.ஆர். தாசன்,
ரூ.5-00. 76 பக்.

மயிலவன் பதிப்பகம், 7, முண்டகக்கண்ணியம்மன்
கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை-600004.

9. *பாரதிப்புதிர்:?* திருமொழிசரோ, கருவை பழனிச்சாமி
திருமொழிப் பதிப்பகம், 119, ஜவஹர் பஜார்,
கரூர். ரூ.10-00. 143 பக்.

10. *தலைப்பைத் தொலைத்து விட்டேன்:* கோ. கருணாகரன்
பாரத இளைஞர் சமூகநலப் பணிக் கழகம்,
புதுச்சேரி—605003. ரூ.5-00. 108 பக்.

11. *வளமான வாழ்வுக்கு வழிமுறைகள்:* ஜியார்வி.
ஜியார்வி பதிப்பகம், பாரதிநகர், வீரபாண்டி அஞ்சல்.
திருப்பூர்—638605, ரூ 4.50, 71 பக்

மணியம் பிரஸ், மதுரை-9.